தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-8

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஆடி 8 (23-7-'60). சனிக்கிழமை | இதழ் 6

கண்ணதாசன் பிறந்த நாள் விழா

கடந்த 9-7-60 அன்று இரவு 8 மணி அளவில் பரணி ஸ்டுடியோவில் ஆசிரியர் கண்ணதாசனின் 33-வது பிறந்த நாள் விழாக் கொண்டாடப்பெற்றது. தமிழறிஞர்களும், இயக்கத் தோழர்களும் கலைஞர்களும் திரண்டு வந்து வாழ்த்திய காட்சிகளே இவை. வாழ்த்திய அனைவருக்கும் கண்ணதாசன் நன்றி தெரிவிக்கிறார்.

வரலாற்றுக் காய்ச்சலா ? வளைந்து தரோம் நாங்கள் !

தமிழ் இலக்கிய வரலாறு பற்றிக்குறை படாத விற்பன்னர்களே இல்லை எனலாம். காரணம்; மற்றைய நாட்டு வரலாறுகள் வரன் முறையோடுஇருப்பதை, ''மக்கள்'' ஒப்புகிறார்கள். தமிழ் நாட்டு வரலாறு மட்டும் தமிழ்நாட்டு வரலாற்று விற்பன்னருக்குக் கூடத் தெரிவதில்லை. தெரியாதது மட்டுமல்ல; இலக்கியங்களில் காணப் பெறும் உண்மைகளைக் கொண்டு, யாராவது எழுதினால் ''அது வெறும் கதை'' என்று வேடிக்கை பேசுகின்றனர். இது தமிழ்நாட்டு இலக்கியங்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இழுக்கு என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். தனிப்பட்டவரைப் பற்றிக் குறிப்பிட்டு எழுத முற்படாவிட்டாலும் ஆங்காங்கே படித்துப் பட்டம் பெற்ற மேதைகள் சிலர் திரித்துக் கூறி வருகின்றதை மையமாகக் கொண்டே இக் கட்டுரை தீட்டப்படுகிறது.

''கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி நம்தமிழ்'' என்பதைப் பலரும் கூறி மகிழ்கிறார்கள். அத்தகைய மொழியில் தோன்றிய இலக்கியங்கள் எண்ணிலடங்கா; ஆனாலும் வரன்முறையோடு வகைப்படுத்திக் கூற முடியவில்லையே ! துன்பம் தான் !! அதைவிடத் துன்பம்—தமிழக அரசியல் வரலாறு ! எந்த நூற்றாண்டில் ஆட்சி முறை தொடங்கியிருக்கும் ? எந்த நூற்றாண்டில் சிலப்பதிகாரத்தில் காணப்படும் செங்குட்டுவன் போர் நடந்திருக்கும் ? இவைபோன்ற பல வினாக்கள் விடைகாண விழைவன! புறநானூற்றில் கபிலர் பாடல்களில் வரலாறு -அகநானூற்றில் வரலாற்றுக் குறிப்புகள் எண்ணிலடங்கா. இவற்றைப் படிக்கும் எவரும் வெறுங்கதை என்று கண்ணை மூடிக்கொண்டு சொல்லை உதிர்த்துவிடுவதில்லை. அவ்வாறு யாராவது பொய், கட்டுக்கதை என்று புகன்றால், ''அறிவுத்தெளிவு ஏற்படவேண்டும்'' என்றுதான் அமைதியுற வேண்டியுள்ளது.

தமிழ் நாட்டு வரலாறு என்று நாம் வரன்முறை கொண்டு கூறமுடியாத காலம் சங்ககாலமேயாகும். சங்கமே இருந்ததா ? அல்லது சங்கங்கள் இருந்தன என்ற கொள்கைகள் வலுவின்றிக் காலூன்றியுள்ளன. அவ்வாராய்ச்சி ஒருவாறு முடிவுற்று எட்டுத்தொகை-பத்துப்பாட்டு-காலம் யாது ? ஐம்பெருங்காப்பியங்கள் ? பதிற்றுப் பத்து ? என்ற வினாக்கள் எழாமல் இல்லை. இந்நூல்களிற் கூறப்படும் செய்திகள் பொழுது போக்குக் கென்று யாராவது கருதுகிறார்களா ? அன்றி, கிழமைக்கு ஓர் இதழ் வெளியிட்டு மறுகிழமை வீசைக்குவிலைபோகும் வெற்றுக் காகிதங்கள் என்று கருதுகிறார்களா ? அவ்வாறு இருப்பின் ஒரு வேளை அவை தாங்கிப் பேசும் செய்திகளும் பயனின்றி இருக்கலாம். சங்க நூல்களில் இயற்கையோடு இயைந்த உண்மைச் செய்திகளை மட்டும் கவிஞர் பேசுகிறாரே தவிர—அடுத்த அடியை எதிர் நோக்கி அடுக்கு மொழியைப் பெய்து சந்தத்தை எழுத வில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பெரும்பாலான கவிஞர்கள் உண்மைச் செய்தியை உரைக்கும்பொழுது தமக்கே இயல்பான இயற்கையோடியைந்த வருணனையைக் குழைத்து வடிவமிட்டுக் காட்டுகிறார்கள். சிலருக்கு விளங்கலாம்; பலருக்குப் படிக்க நேரமில்லை ! இதனை எண்ணாமல் தமிழ் இலக்கியங்கள் பொய்யும்—வீண் கற்பனைகளும் விளைகின்ற நிலம் என்று விளம்புதல் பொருந்தாது.

இந்தியால் செந்தமிழ் வெந்துவிடும் என்றஞ்சிப் போராட்டம் தேடவில்லை; போராட்டம்ஏன் ? 'தமிழ் தனி மொழி. 'தனித்து இயங்கும் செழிப்பான மொழி. தாய் மொழியின் தனித்தன்மை ஆதிக்க வெறியால், தரம் குறைய ஏதுவாகுமே என்ற கவலையினால்தான் ! எத்துணையோ மொழிகளை அறிந்த நாடு தமிழ்நாடு. யவனத்து விற்பனரும், சீனத்து வாணிகரும் மிலேச்சரும் வாழ்ந்து மகிழ்ந்த வளநாடு தமிழ்நாடு. பல்வேறு பட்ட மொழிகளையும், பண்பாடுகளையும் மகிழ்வோடு ஏற்று மனம் கொண்ட மக்கள் தமிழ் மக்கள். என்றாலும் எதனைச் செய்யினும் ஏற்கும் மக்கள் பெற்று வளர்த்த தாயை, தாய் மொழியை அழிக்க வரும் பகையை ஒழிக்காமல் அயரார் என்பதைப் பல்வேறு முறைகளில் நாடு கண்டுள்ளது.

தமிழிலக்கிய வரலாறு எழுதப்படல் வேண்டும். எழுதப்பட்ட இலக்கியங்களை அடியொற்றித்தான் இருண்ட காலத்திற்கு வரலாறு வரையமுடியும். காட்டாக ஒன்று கூறுவேன். சிலப்பதிகாத்தில் சேரன் செங்குட்டுவன் இமயம் சென்று வென்று மீண்ட செய்தி வஞ்சிக் காண்டத்தில் அழகோடு கூறப்பட்டுள்ளது.

''அடுதேர்த் தானை
ஆரிய வரசர்
கடும்படை மாக்களைக்
கொன்று களங்குவித்து
....
ஆரிய வரசர்
அமர்க்களத் தறிய
நூழி லாட்டிய
சூழ்கழல் வேந்தன்''
(சிலப்-கால்கோட் காதை)

எட்டு ஆரிய அரசர்களை எதிர்த்து வென்றான்; வென்றவன் வீணரைக் கொன்றொழிக்காமல், நாவடக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தினால் நாடு விட்டுத் தலைமேற் கல் சுமத்தித் தமிழ்நாடு கொணர்ந்தான். நாவடங்கிய எண்மரை நான்மாடக் கூடத்தில் சிறை நீக்கிச் சிறப்புச் செய்து கண்ணகி கோவில் விழா முடிந்தவுடன் வடநாடு திருப்பி அனுப்புகிறான். இது சிலம்பு காட்டும் சிறந்த பகுதி. இதிற் காணப்பெறும் ஆரிய அரசரைச் செங்குட்டுவன் வென்றான் என்பதை எவ்வாறு ஒப்பமுடியும் ? இதற்கு வடநாட்டு வரலாற்றில் ஆதாரம் இல்லையே என்று தமிழ்நாட்டு மண்ணில் தோன்றியோர் கேட்கின்றனர்.

இவர்களுக்கு ஒன்றைமட்டும் கூறி இக்கட்டுரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். வடநாட்டு வரலாற்று விற்பன்னர்கள் ''பரீக்ஷித மகாராஜா' என்ற புராண கால அரசனை இருந்தான் என்று எடுத்துக்கொண்டதோடு' அவன் வழித் தோன்றல்கள் என்று வரலாறு புனைந்து, உண்மை என்று ஒப்புகின்றனர் அது மட்டுமல்ல ''வேதங்கள்''-பரிதாபம் ! ஒருவர்கூட அல்ல, பலர், பல்வேறு காலங்களில், எழுதிக்கூட அல்ல; காதிலே சொல்லி (செவிடனும்) அதைக் கேட்டு-யாரோ ஒருவன் எப்போதோ எழுதினான் ! அதுகூட ''வரலாறு'' என்று ஒப்புகின்ற வரலாற்று அறிஞர்கள், ஒரே தனி மனிதர் எழுதிய அளவுக் கற்பனையோடு கூடிய சிலப்பதிகாரத்துச் செய்தியைப் பொய் என்றும் ''வரலாற்றுக்குப் பயன் தருமா?''என்று வாதிடுவதும் தமிழ்த் தாயைக் குறை கூறுவதாகும்.

காலஞ் சென்ற திரு. கோவிந்தசாமி (பிள்ளை) (அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்) இந்தச் சிலப்பதிகாரச் செய்திகளிசுகருக்கு முன் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று கருதியதாகப் பேராசிரியப் பெருமக்கள் கூறுவர். இதனை நன்கு ஆராய்ந்தால் நிச்சயம் உண்மை புலனாகும். தமிழ்ப்பண்பு வளரத் தமிழிலக்கியம் தலைதூக்கி நிற்க வேண்டும். தமிழ்நாட்டு வரலாறு விளக்கம் பெற தமிழிலக்கியம்தான் துணையாகும். எனவே நம் நாட்டு வரலாற்றுக்கு நம் தாய்மொழி துணைகொண்டு ஆராய்தல் பெரும் பயனளிக்கும்.

-ருக்மணி இராமநாதன் பி.எஸ்சி.

''தென்றல்''

நெடுங்கதைப் பரிசுப் போட்டி

இளைய எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும், புதியனவான அணிகள் பல தமிழ் மகளுக்குச் சூடவும், ''தென்றல்'' எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை நண்பர்கள் அறிவர். ''தென்றல்'' 1955-ல் நடத்திய நெடுங்கதை, காவிய, நாடகப் போட்டிகளை வரவேற்ற தமிழகம் இப்போது நடத்தப்பெறும் நெடுங்கதைப் போட்டியையும் வரவேற்கும் என்றறிவோம். தென்றல் நண்பர்கள் அனைவரும் இப் போட்டியில் பங்கு கொள்ள அழைக்கிறோம். வருக ! வருக !

விதிகள்

1. தோழர்கள் அனுப்பும் கதைகள் தமது சொந்தக் கற்பனையாய், தமிழகச் சூழலுக்கேற்ப எழுதப்பட்ட நெடுங்கதைகளாக இருக்க வேண்டும்.
2. இந் நெடுங்கதைகள் வெள்ளைத்தாள் அளவில் 200 முதல் 250 பக்கங்கள் வரை அமையலாம். 250 பக்கங்கட்கு மேல் போகக்கூடாது. பக்கத்திற்கு முப்பது வரிகள் அமைதல் நலம்.
3. முடிவு தேதி 30-7-60 ஆகும்.
4. போட்டி நடுவணர்கள் பெயர் 6-8-60 அன்று ''தென்ற''லில் அறிவிக்கப்படும்.
5. மொத்தப் பரிசுத் தொகை ரு.500-ல், முதற்பரிசு பெற்றவர்க்கு ரு. 250-ம், இரண்டாம் பரிசு பெற்றவர்க்கு ரு. 150-ம் மூன்றும் பரிசு பெற்றவர்க்கு ரு. 100-ம் வழங்கப்பெறும்.
6. போட்டியின் முடிவுகள் 20-8-60 அன்று ''தென்றலில்' அறிவிக்கப்படும்.
7. தேர்ந்தெடுக்கப்பெறும் நெடுங்கதைகளைத் ''தென்ற''லில் வெளியிடும் உரிமையும், பின் நூல் வடிவில் வெளியிடும் உரிமையும் ''தென்றல்'' அலுவலகத்தார்க்கே உரியன.

கதைகள் அனைத்தும் பதிவு நூலஞ்சலிலேயே அனுப்பப்பெறல் வேண்டும்.

மறவாதீர் ! முடிவுநாள் 30-7-60 !

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

கண்ணதாசன்

மலர் 7 | 23-7-'60 | இதழ் 6

இந்தி எதிர்ப்பு மாநாடு!

இத்திங்கள் 31-ம் நாளன்று சென்னை கோடம்பாக்கம் அண்ணா நகரில் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெறுகிறது. முக்கியமான கட்டத்தில் நாம் கூடுகிறோம்! மொழி உணர்ச்சி எவ்வளவு தீவிரமானது என்பதை விபரீதமான முறையில் அசாமில் கண்டு விட்டவர்கள், முறையான வழியில் தமிழகத்தில் காணப்போகிறார்கள். ஒரே நாள் மாலைமாநாடு தான். ஆனால் அதிலும் நாம் எவ்வளவு பேர் கூடுவோமென்பதைத் தமிழகத்து அமைச்சர்கள் தெரிந்து கொள்ளட்டும். வலிவு மிக்க வாலிபர்படையை, தடியடியும் துப்பாக்கியும் தகர்த்து விட முடியாது என்பதை அவர்கள் உணரட்டும்! வெள்ளத் திரளெனக் கூடுங்கள்! வீரர் நாம் எனப் பாடுங்கள்! தமிழ் வாழத் தலைகொடுப்போம் என்பதை உலகிற்குப் பறை சாற்றுங்கள்!

ஜூலை 31! மறந்து விடாதீர்கள்!

★

'லிங்'கும் 'குமுத'மும்

தமிழ்நாட்டுக் காங்கிரசுக்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குள் பிளவு ஏற்படாதா என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்ததை நாமறிவோம். பொருளற்ற முறையில், பிளவு என்றும் சண்டை என்றும் கதைத்துக்கொண்டிருந்ததும் நமக்குத் தெரியும். இந்தப் பரிதாபத்திற்குரியவர்கள் எவ்வளவு சீக்கிரம் ஏமாற்றம் அடைந்தார்கள் என்பதையும் நாம் சிரித்துக்கொண்டே கவனித்தோம். ஆனால் வடநாட்டுக்காரர்கள் சிலருக்கு 'கழகம் பிளவுபடாதா'' என்ற நப்பாசை இன்னும் இருந்துகொண்டு வருகிறது. அதன் விளைவுதான் வடநாட்டிலிருந்து வெளிவரும் ''லிங்க்'' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் காணப்படும் கருத்துக்கள்.

ஏதோ ஒரு தலைமையை ஒதுக்கிவிட்டு, தீவிரமான இன்னொரு தலைமை அந்த இடத்தைக் கைப்பற்ற முயல்வதாகக் கதை கட்டுகிறது ''லிங்க்''. மொழி பெயர்ப்புக்களை ஏற்றுக்கொள்ளாத குமுதம் அதை அவசர அவசரமாக மொழி பெயர்த்து, தலையங்கத்துக்கு அடுத்தபடி முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருக்கிறது. அந்தக் கருத்துக்களில் கழகத் தோழர்களுக்குக் குழப்பம் ஊட்டுவது எதுவும் இல்லை என்றாலும், 'ஏன் இப்படிச் செய்திகளைக் கற்பனை கலந்து பெய்து வைக்க வேண்டும்?'' என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இயக்கத்திற்குள்ளே இப்போது புதிய மிடுக்கும் தீவிரமும் காணப்படுகின்றன. இளைஞர்கள் சுறுசுறுப்போடும் ஆர்வத்தோடும் பணியாற்றுகின்றார்கள். எதிரிகளின் விலாவை வேதனை தாக்குமளவுக்கு, உற்சாகம் காணப்படுகிறது. ''நாம் சினிமாக்காரர்களுக்குக் கொடி பிடிப்பவர்கள்!'' என்ற எண்ணம் பெரும்பாலும் மறைந்து வருகிறது. சம்பத்தின் கையைப் பலப்படுத்துவதாகக் கருதி, காங்கிரசு நாளிதழ்கள் செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டு வந்தன அல்லவா? அந்த முயற்சி வீண் போகவில்லை. அவர்கள் விரும்பியதுபோல் சம்பத்தின் கைபலப்பட்டது. அதன் விளைவு, பலப்பட்ட அந்தக் கை காங்கிரசுக்காரன் தலையிலேயே விழுந்தது. இயக்கத் தோழர்களுக்கு இருந்த ஓரளவு ஐயப்பாடு முழுதும் தெளிந்தது. அண்ணா அவர்களும் சம்பத் அவர்களும் கலந்து கொள்ளும் கூட்டங்களெல்லாம் மாபெரும் அணிவகுப்புக்கள்போல நடைபெறுகின்றன.

அண்மையில் நானும் தோழர் சம்பத் அவர்களும் ஒரு நாள் காலை கோவையிலும் மதியம் திருப்பூரிலும் மாலை சேலத்திலும் கூட்டங்களில் கலந்து கொண்டோம். இரண்டு சிறப்புக் கூட்டங்களிலும் ஆயிரக்கணக்கில் வசூலாயிற்று. சேலம் பொதுக்கூட்டத்தில் ஒன்றரை இலட்சத்துக்கு மேல் மக்கள் கலந்து கொண்டனர். காங்கிரசுக்காரர்கள் இந்த விளைவை எதிர் பார்த்தே இருக்க மாட்டார்கள். வடநாட்டவர் கூட இந்த மாற்றத்தைக் கண்டு திகைக்கிறார்கள் என்பது தெரிகிறது. அண்மையில் 'பிளிட்சு' என்ற ஏடு வேடிக்கையான ஒரு கதையை மெய்யென்றே நம்பி வெளியிட்டிருக்கிறது. ஆச்சாரியார் முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துவிடப் போவதாகவும், அது பற்றிய ஒரு கடிதத்தை ஒரு நாள் இரவு கழகத் தலைமை நிலையத்திற்கு இரகசியமாக அனுப்பியதாகவும், திராவிட நாட்டுக்காக அவரும் சேர்ந்து போராடப் போவதாகவும் அது குறிப்பிட்டிருக்கிறது. தோழர் சம்பத் அவர்கள் ஒரு கூட்டத்தில் சொன்னது போல், இது உண்மையாக இருக்க வேண்டுமென்றே நாமும் ஆசைப்படுகிறோம்; இல்லையே என்று தான் வருத்தப்படுகிறோம்! நிற்க,

இயக்கத்தின் பகைவர்கள் தங்கள் பத்திரிகைகள் மூலம் இன்னும் பிளவு படுத்துவதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறார்கள் என்பதைத்தான் குமுதத்தின் மொழி பெயர்ப்பு காட்டுகிறது. ஆனால் மற்றவர்கள் ஏமாந்ததுபோலவே குமுதமும் ஏமாறும். சம்பத் எடுத்துக்கொண்ட முயற்சி பிளவுக்காக அல்ல; மாபெரும் பொறுப்புக்களை நாம் தாங்கி ஆக வேண்டும் என்ற உணர்வை ஊட்டுவதற்காக. இதோ, அவரே முன் உதாரணமாகப் போராட்டத் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்! போராட்டக் குழுவும் தீவிரமாக வேலை செய்து கொண்டு வருகிறது. இந்த விழிப்புணர்ச்சி எவ்வளவு தீவிரமாகச் செயல்படப் போகிறது என்பதை எதிரிகள் கவனிக்கட்டும். இந்த உணர்ச்சியை சம்பத் ஏற்படுத்தினார் என்பதை ஒப்புக்கொண்டுள்ள இந்தப் பத்திரிகைகள், போராட்டத்திற்குப் பிறகு என்ன எழுதப்போகின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்! ★

முழக்கங்கள்!

1. வங்கப்புயலென சிங்கத் தமிழனே வல்லமை கொண்டெழடா
சங்கத் தமிழ்மொழி மாண்பினைப் பெற்றிடத் தடையினை நீக்கிடடா.
— முத்துப்பேட்டை-அன்பழகன்.

2. இன்பத்தமிழை மாய்க்கவரும் இந்தியினை சாய்க்க வாரீர்!
— கு. செந்தமிழ்ச்செல்வன், சென்னை-12.

3. ஆற்றலிலா இந்தியிடம் ஆள்கின்ற பொறுப்பா?
''ஏற்றதில்லை; மாற்''றென்றால் எம்மீதில் வெறுப்பா?

4. செந்தமிழர் நாட்டிலா இந்திவாலாட்டம்?
சிங்கத்தமிழனே தொடங்கு போராட்டம்!
— புதுப்பதி-இளஞ்சிற்பி.

5. செந்தமிழாம் நம்மன்னை சீராக வளர்ந்தோங்க
செத்தமொழி இந்திதனை ஒழிப்பதுவே நன்றாம்!
— ப. அ. இசுமாயில், திருப்பத்தூர்.

6 முச்சங்கப் புகழ்பெற்ற முத்தமிழ் இருக்கையில்
நச்சரவாம் இந்திநம் நாடாள விடுவதோ?
— சு. மா. இராமலிங்கன், புதுவை.

7. செந்தமிழைப் பழித்தாரைக் கூசாமல் ஏசு!
இந்தியுள்ள பலகைகளில் கருந்தாரைப் பூசு!

8. கூட்டினுள்ளே அடங்கிக்கிடப்பது நத்தை-இந்திப்போர் வந்தும்
வீட்டினுள்ளே அடங்கியிருப்பவன் சொத்தை
— ப. கோபாலன், திருப்பூர்.

9. கேட்குது கேட்குது போர்முரசு-இங்கு
கெடுகெட்ட இந்திக்(கு) ஏதரசு?

10. பொல்லாத இந்திக்கு ஆதிக்கமாம்-அது
பொறுப்பேற்று எதைஇங்கு சாதிக்கவாம்?
— தென்னஞ்சோலையன், சின்னமனூர்.

11. எருமை அறியுமோ இனிய நறுமலரென்று-தமிழ்
அருமை தெரியுமா இந்திக் கழுதையும்!
— சிவ. சிற்பி, முகவை

12. வடநாட்டுக் குள்ளநரிக் கூட்டம்—இனி
வாலாட்ட நாம் விடமாட்டோம்!
—ப. துரைமன்னன், நீலச்சந்திரா, பெங்களூர்.

13. குடிகெடுக்க வந்தவளே! கோட்டானே! நரியே!
தடியெடுக்கும் முன்நீயும் ஓடுதல்தான் சரியே!

14 மலர்க்காடு தமிழ்க்காடு திராவிட நாடு—அதைக்
குலைத்திடும் மந்தி இந்தியென் றோடு!
—காளிதாசன், காஞ்சிபுரம்.

15. செழித்திடும் தமிழின் வாழ்வைச் சிதைத்திடும் இந்தி நாயின்
கழுத்தினை அறுத்திடுவோம்! அந்தக் களத்தினில் தமிழைக் காத்திடுவோம்!
—முத்து முருகன், திருச்சி.

இந்தி எதிர்ப்பு மாநாடு

31-7-60 அன்று பிற்பகல் 2 மணிக்கு

சென்னை அண்ணா நகரில் தாளமுத்து நடராசன் அரங்கில் நடைபெறும்.

தலைவர்:

அறிஞர் **அண்ணா** அவர்கள்

திறப்பாளர்:

பொதுச் செயலாளர் நாவலர்

இரா. நெடுஞ்செழியன்

கழக முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்து கொள்வர்.

ஈ. வி. கே. சம்பத் எம். பி. — வ. கு. தலைவர்.
கே. ஏ. மதியழகன் பி.ஏ. — வ. கு. செயலாளர்.

கியூபாவின் கீதம் புரட்சிப் பாடல்

காஸ்ட்ரோ

"வான வெளியையும் அடக்கியாளும் வல்லமை பெற்றவர்கள் நாங்கள்! வையமெலாம் எங்கள் கட்டளை கண்டு மண்டியிடுகிறது! அரசுகளெல்லாம் எங்கள் ஆற்றல் கண்டு அஞ்சி நடுங்குகின்றன! தலை வணங்கா நாடில்லை; தாள் பணியாத் தலைவரில்லை. ஆம்! அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்றால், அகிலமெல்லாம் நடுங்கிச் சாவதையறியாயோ! அறிந்தும் எம்மைப் பழிக்கிறாயோ? பொங்காதிருக்கட்டும் எங்கள் சினம்; பொங்கினால் தங்காது உந்தன் தலை! பொசுங்கிப் போக விருப்பமெனின் எதிர்த்துப் பேசுங்கள். அன்றேல், எடுத்த துப்பாக்கிகளை வீசி எறியுங்கள்; எங்கள் தாளில் வீழ்ந்து தொட்டு வணங்குங்கள்! இம்...!"

ஐக்காண்டவரின் ஆணவக் குரல் இது!

"மண் எமது! வளமும் எமது! ஆளும் திறமும் எமக்குண்டு! 'குண்டு போட்டுப் பொசுக்கிடலாம் குட்டி நாடாம் கியூபாவை! மண்டியிட்டு வணங்கச் செய்திடலாம் அம்மண்ணுக்குரியோரை!' என்றெண்ணித் தப்புக் கணக்குப் போடாதீர்! வீணே மண்ணைக் கவ்வாதீர்! டாலர் மாமாவின் லீலா விநோதங்களுக்கு எப்படி நாங்கள் மயங்கவில்லையோ, அதே போல ஐக்காண்டவரின் அதட்டல் உருட்டலுக்கும் அஞ்சோம்; அயரோம்! 'பொருளியல் வளர்ச்சியைப் பொசுக்கிடலாம்! பின்னர் கண்ணீரும் கம்பலையுமாய்க் கலங்கியழிந்திடும் கியூபா; கவிழ்ந்து விழும் தன்னாட்சி!' என்றெல்லாம் வானக்கோட்டை கட்டுகிறீர். கியூபாவில் வெடிக்கும் புரட்சிப் பாடலைக் கேட்டிடுவீர்! கலம் ஏற்காக் கடலில்லை; கியூபாவின் சர்க்கரையை ஏற்கா நாடுமில்லை! அமெரிக்க மடம் வாங்காவிட்டால் உருசிய மடம் காத்திருக்கிறது; அதுவும் போனால் சப்பான் சந்தை மடம் இருக்கிறது! சரக்கில் நயம் இருந்தால் வணிக வழியில் பயமில்லை!"

இது பிடெல்காஸ்ட்ரோவின் சிங்க முழக்கம்.

அண்மையில் உலகைக் கவர்ந்திருக்கும் பிரச்னைகளுள் ஐக்கின் பிரச்னைகள் விவாதத்திற்குரியன. யூ 2. முக்கறு படலம் நடந்தது; அடுத்து சப்பான் மண்ணையும் மிதிக்க ஏலவில்லை; இப்போது அகிலத்தவரை எல்லாம் தூக்கி எறிந்து பேசுகின்ற அவரை, கியூபாவும் ஒரு மூலையில் வீசி எறிகிறது! ஆம்! கியூபாவின் இளந்தாடி வீரர்களின் நாடி நரம்புகளெல்லாம் ஐக்கின் வல்லரசுக்குமுன் புடைத்தெழுந்திருக்கின்றன!

ஐக்கின் இறுதிக் காலம் அவதிக் காலமாக மாறியிருப்பது வேதனைக்குரியதுதான்! ஆனால் பிற நாடுகளின் எலும்புகளைப் பிய்த்தெடுத்து மணிமுடி சூட்டிக்கொள்ள நினைக்கும் அமெரிக்காவின் போக்கு கண்டனத்திற்குரியதே!

∴ ∴ ∴

கியூபாவின் நெடுஞ்சாலைகள் கடந்த சில நாட்களுக்குமுன் இந்தக் காட்சிகளைச் சந்தித்தன. நடந்த நிகழ்ச்சிகள், சூயசின் கரைகளில் திணறி ஓடிய பிரித்தானியக் குடும்பங்களை நினைவூட்டின.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளில் பணியாற்றிய பிரித்தானியர்களும் அமெரிக்க ஐக்கிய நாட்டினரும் குதிங்கால் பிடரியில்பட ஓடினர். குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு மனைவியர்கள் ஓடினார்கள். வாழ்ந்த வானளாவிய மாளிகைகளை, அனுபவித்த ஆயிரமாயிரம் சுகக் கருவிகளை, கொட்டிக் கிடந்த பொன்னை-மணியை எல்லாம் விட்டோடினர். கையில் அகப்பட்ட கவுன்களையும் "சூட்"களையும், மட்டுமே தூக்கிக்கொண்டோடினர். வானொலிப் பெட்டிகளை. வளர்த்த நாய்களை. வாசனைத் தைலப் புட்டிகளை, தங்க சிகரெட் பெட்டிகளை எல்லாம் எண்ணி, எண்ணிப் பார்த்துக் கணக்கெடுத்து எடுத்துச் செல்ல அவர்களுக்கு நேரமில்லை. காஸ்ட்ரோவின் செவ்விழிகளில் படும்முன் தப்பியோடினால்தான் தலை தப்பும் என்று நினைத்தனர். ஆடம்பரப் பொருட்களைப்பற்றியா நினைப்பர்? அன்றாடத் தேவைக்கான பொருள்களை எடுத்துச் செல்லக்கூட அவர்களுக்கு வசதியில்லையே! அத்தனை பேரும் அண்டைநாட்டு மண்ணிலே அடியெடுத்துவைத்த பின்னர்தான் அமைதியாக மூச்சுவிட்டனர்.

காஸ்ட்ரோ அத்தனை மோசமாக அவர்களை அடித்து நொறுக்கிவிடவுமில்லை. அப்படி எண்ணவுமில்லை. ஆனால் தனது நாட்டில் அமெரிக்கப் பொருளாதார ஆதிக்கம் வேரூன்றுவதை அடியோடு வெறுத்தான். அதனால் அவன் ஐக்கிய நாட்டு முதலாளிகளிடம் தனது நாட்டுக்குத் தேவையான குருடாயிலைப் பெறாமல் உருசியாவிலிருந்து பெற்றுவிட்டான். திடீரென்று கியூபா உருசியாவுடன் கொண்டுவிட்ட பொருளாதார உறவுதான் அவர்கள் அடிவயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது.

இத்தனை நிலைமைகளும் வளர்ந்ததற்கு அடிப்படை கியூபா அரசினர் 16-ந் தேதி மேற்கொண்ட தேசியமயமாக்கும் சட்டமும் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகளைக் கைப்பற்றியதுமேயாகும். இவ்வெண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் பெரும்பான்மை ஐசனோவரது நாட்டுக்காரர்களுக்கும், சிறுபான்மை பிரித்தானியர்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் சொந்தமானவை. இவ்வாலைகளை காஸ்ட்ரோ கைப்பற்றியதும், ஐசனோவரின் பொருளாதார முற்றுகை உச்சக்கட்டத்திற்கு வந்துவிட்டது. அதை எதிர்த்துத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத்தான், அமெரிக்கர் சொத்துக்களையும் அமெரிக்கக் கம்பெனிகளையும் தேசியமயமாக்கும். சட்டத்தை நிறைவேற்றியிருக்கின்றனர் கியூபாவினர் சட்டம் இன்றோ நாளையோ, எந்த வினாடியிலும் நடைமுறைக்கு வரலாம்! இதுகண்டே அமெக்கர் தகாத பல பழிகளைச் சுமத்தியிருக்கின்றனர். அந்தப் போராட்டச்சூழலே, இக்கட்டுரையின் வடிவம்.

இந்தப் புகைப்படலத்துக்குப்பின் விளைந்தெழுந்த தீ நாவுகள் வாசிங்டன் வரை பரவியிருக்கின்றன. கியூபாவில் உள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகளில் பெரும்பாலானவை ஐக்கியநாட்டு முதலாளிகளின் ஆலைகள். அம் முதலாளிகளுக்கு வாசிங்டன் பாராளும் மன்றத்தில் உள்ள செல்வாக்கு, மன்ற உறுப்பினர்கள் சிலர் வாயின்மூலமாகத் தெரியவருகிறது. சூயசை எகிப்தியர் கைப்பற்றியபோது வராத சினம், கியூபாவினரின் பொருளாதாரப் புரட்சி நடந்த இன்று வந்திருக்கிறது, ஐசனோவருக்கு.

"டைம்சு" எனும் ஏடு எழுதியது போல, ஐசனோவரின் தோழர்கள் இப்போது அந்தச் சின்ன நாட்டை நேரடியாக எதிர்க்கமுடியாதிருக்கின்றனர். அது உலகப் பிரச்னையாகி, கியூபாவுக்கும் ஆதரவாகச் சில நாடுகள் எழக்கூடுமே என்று அவர்கள் சிந்திக்கின்றனர். அதனால் நேரடிப் போரைவிட, மறைமுகப் போரில் அக்கறை காட்டுகின்றனர். ஆட்சியை மாற்றுவது மூலம் அவர்களின் ஆசையை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்றெண்ணி, இப்போது காஸ்ட்ரோவின் ஆட்சியைக் கவிழ்க்க என்னென்ன வழிகள் உண்டு என்று பார்க்கின்றனர்.

கியூபாவின் மலைத்தோட்டங்களிலும் தொழிற்சாலைகளிலும் மின்சாரத் திட்டங்களிலும் ஐக்கிய நாட்டுக்காரர்கள் நூறு கோடி டாலர்களுக்குமேல் விதைத்திருக்கின்றனர். அவர்கள் ஆட்சியை மாற்றியமைக்க எடுத்துக் கொண்டுள்ள சூழ்ச்சிக் கருவிகள் பல. அவற்றுள் ஒன்று "நியாயமான தேர்தலை நடத்து!" என்ற குரல்! தேர்தலை நடத்த வேண்டிய காலத்தில் நடத்துவதற்கு அறிந்தவன்தான் காஸ்ட்ரோ. ஆனாலும் எந்தக்கருவியையும் ஏந்தத் தயாராய் இருக்கும் முதலாளித்துவ வர்க்கத்தின் இந்தக்குரலை ஒலிக்கக்கிளம்பியன் சுமித் என்பான். அவன் முன்பு ஐக்கிய நாடுகளின் தூதனாகக் கியூபாவில் பவனி வந்தவன். இந்தத் தேர்தல் 'கிளர்ச்சி'க்குச் சரியான பொம்மையும் கிடைத்திருக்கிறது. சுமித்தின் கைப்பாவைக்குப் பெயர் அண்டோனியோ வரானோ! அவன் கியூபாவின் முன்னாள் முதல் அமைச்சர்! அவனது சதிக்கூடம் மியாமி எனும் இடத்தில் அமைந்துள்ளது. தேர்தலை நடத்துவதற்கு முன் ஐக்கிய நாடுகளின் படைகள் தலையிடவேண்டுமென்பதும் அவர்கள் விருப்பமாயுள்ளது. இரத்தக் களரிக்குப்பின் பொம்மலாட்டம்! இதுதான் அவர்கள் திட்டம்!

இதற்கிடையே, கியூபாவின் பகை நாடான டொமினிக்கன் குடியரசின் பட்டினம் ஒன்றிலிருந்து செய்தி ஒன்று வந்துள்ளது. நான்கு கப்பல்கள் நிறைய படைஞர்கள் அத்துறைமுகத்திலிருந்து புறப்பட்டிருக்கின்றனராம். 'எங்கே போகின்றனர்? எதற்குப் போகின்றனர்?—'இந்த விவரங்கள் தரப்பட வில்லை. ஆனால் நிகழ்ச்சிகளைக்கூர்ந்து கவனிப்பவர்கள் இதயத்தில் பல ஐயங்கள் வெடித்திருக்கின்றன.

காஸ்ட்ரோவின் நடவடிக்கைகளைக் கண்டு எண்ணெய் மன்னர்கள் திடுக்கிட்டு விடவில்லையாம். தாங்கள் தரும் எண்ணெய்க்குப் பதிலாக உருசியரின் எண்ணெயைக் காஸ்ட்ரோ வாங்கப் போகிறான் என்ற சேதி முன் கூட்டியே அவர்களுக்குத் தெரியுமாம். ஊர் முழுதும் பரவிக்கிடக்கும் அவர்களின் ஒற்றர்களின் முன்கூட்டியே தாக்கல் தந்துவிட்டனர் போலும். ஆனால் என்று பொருளாதாரப் புரட்சி வெடிக்கும் என்பது மட்டும் அவர்களுக்கு உறுதியாய்த் தெரியவில்லை. காஸ்ட்ரோவின் கட்டளை எப்போதும் வரலாம்; அவனது ஆட்கள் ஆலைகளைக்கைப்பற்ற எப்போதும் வரலாம் என்று காத்திருந்த அந்த எண்ணெய்ச்சுத்திகரிப்பு ஆலைக்காரர்கள் தங்கள் ஆலைகளிலே வழக்கம்போல் மிகுந்த அளவு குருடாயிலைத் தேக்கி வைக்க வில்லை. மூன்றுநாட் தேவைகளை நிரப்பக் கூடிய அளவு குருடாயில்தான் அந்த ஆலைகளில் இருந்தனவாம், காஸ்ட்ரோவின் அதிகாரிகள் நுழைந்து பார்த்தபோது!!

வெடித்திருக்கின்ற இந்தப் புதுநிலைமைக்கான வித்து, வெகுநாட்களுக்கு முன்பே ஊன்றப்பட்டு விட்டதாம்!

ஐக்கிய நாடுகளிலிருந்து கியூபாவுக்கு வந்த கொழுத்த நில முதலாளிகளை, காஸ்ட்ரோ கண்டிக்கத் தொடங்கிய நாளிலேயே சதியின் வித்து ஊன்றப்பட்டு விட்டது. காஸ்ட்ரோவைக் கவிழ்த்த பல சதிகள் நடந்தன. முடிவில் சதிகள்தான் சரிந்தன. 'ஆட்சியைக் கவிழ்க்க முடிய வில்லையா? அவன் தலையையாகிலும் கொய்து வாருங்கள்!' என்றும் ஏவினர் கூலிப் படையை. அவன் எச்சரிக்கையாக இருந்ததால், வரலாற்றின் மற்றொரு பக்கமும் கொலையேடாக மாறுவது தப்பியது! வன்னெஞ்சர்கள் ஆசையில் மண் விழுந்தது! வாசிங்டனிலிருந்து ஒருமுறை அழைப்பு வந்ததுமுண்டு. அதையும் ஏற்றுக்கொண்டு 'வருவது வரட்டும்!' என்று வாசிங்டனுக்கும் சென்றான். சென்றபின்தான், சிக்கலான நிலைமை உருவாகியிருப்பதை—வரவேற்புக்குப்பின் படுகுழி வெட்டப் பட்டிருப்பதை உணர்ந்தான். இவன் வந்து சேரும் வரைக்கும் வாலைச்சுருட்டிக் கொண்டு கிடந்த மஞ்சள் ஏடுகள், வாசிங்டனுக்கு வந்து சேர்ந்ததும் குரைக்கத் தொடங்கின. மஞ்சள் ஏடுகளின் தீயபிரசாரத்தை உணர்ந்தவனாய்த்திரும்பினான் காஸ்ட்ரோ.

தாயகம் திரும்பியதும் காஸ்ட்ரோ தெளிவாக எடுத்துச் சொன்னான். கியூபா தன் ஆட்சி பெற்றது மட்டும் போதாது. பொருளாதார விடுதலையும் பெற்றாக வேண்டும் என்று அறிந்தான்; முழங்கினான். வெளிப்படையாக இவன் சொன்னதும், அமெரிக்காவின் சினம் நேரடியாய் இவன் மீது பாய்ந்தது. காஸ்ட்ரோ கலங்க வில்லை. பயம் காட்டிய அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் தன் தாயகத்திற்கிருந்த வணிகத் தொடர்பைப் படிப்படியாக அறுக்கத் தொடங்கினான். கியூபாவின் வணிகத்தில் நூற்றுக்கு எண்பது பங்கு ஐக்கிய நாடுகளினால் நடந்தது. நிலைமை இப்படியே இருப்பது பொருளியல் விடுதலையைப் பொசுக்கிக்கொளுத்துவதாகும் என்பதால், பிற நாடுகளோடு தன் வணிகக் கிளைகளைத் தொடர்புப்

எரிமலை முழக்கம்! இது; எச்சரிக்கை!



ஐசனேவர்

படுத்தினன். கியூபாவின் உற்பத்திகளில் சரிபாதி சர்க்கரையாகும். அதாவது ஆண்டொன்றுக்கு கியூபாவின் சர்க்கரை 30 இலட்சம் டன் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்றது. அது அந்நாட்டின் தேவையில் மூன்றில் ஒரு பங்காகும்.

காஸ்ட்ரோ பிற நாடுகளுடன் வணிகத் தொடர்புகொண்டான்; சப்பான், மேற்கு செர்மனி, போலந்து, ஐக்கிய அராபியக் குடியரசு, செக்கோசுலொவேக்கியா, சோவியத் குடியரசு முதலிய நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, அவற்றிற்குத் தன் சர்க்கரையைத் தந்து, அங்கு கிடைக்கும் பல்வகைப் பொறிகள், கருவிகள் மற்றும் துணிகளைப்பெற்ருன், இவற்றுள் தலையாயது அவன் சோவியத் குடியரசுடன் 19-6-60 அன்று செய்து கொண்ட ஒப்பந்தமே! கியூபாவின் தேசிய வங்கித் தலைவனும் இளைஞனும் ஆன கியிவாரா, சோவியத் குடியரசிற்கு நல்லெண்ணப் பயணம் சென்று திரும்பினன். "சோவியத்திடம் பெட்ரோலியம் இருக்கிறது. அதை நமக்குத் தரவும் அது தயாராய் இருக்கிறது!" என்று தாயகம் திரும்பியதும் அவன் சொன்ஞன். ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி கியூபாவின் சர்க்கரை உருசியாவுக்குப் போகவும், உருசியாவிலிருந்து கியூபாவுக்கு 40 ஆயிரம் டன் கோதுமையும் 8 கோடி டாலர் பெறுமான குருடாயிலும் வரவும் விதிகள் வகுக்கப்பட்டன. அமெரிக்க முதலாளிகளிடம் கியூபா 2.80 டாலருக்கு எண்ணெயைப் பெற்றதென்ருல், உருசியரின் எண்ணெய் மிகக் குறைவாக 1.97 டாலருக்குக் கிடைத்தது. இதனுல் 2 கோடி டாலர் மீதி ஏற்பட்டது கியூபாவுக்கு.

காஸ்ட்ரோவின் இந்த நடவடிக்கைகளைக் கண்டதும் அமெரிக்கஎண்ணெய் முதலாளிகள் கியூபாவில் உள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகளில் வழக்கமாக நடக்கும் வேலையை நிறுத்திவிட்டனர். அத்தோடு, கியூபா அரசாங்கம் தங்கள் கம்பெனிகளுக்கு 8 கோடி ருபாய் பாக்கி தர வேண்டியுள்ளது என்றும் நெருக்கினர். கியூபாவின் விமானங்களுக்கு முன் பணம் ஏதுமின்றி எண்ணெய் ஊற்றிப் பின்னர் பட்டியல் தொகையைப் பெற்று வந்த அமெரிக்க முதலாளிகள் - ஐசனேவரின் தோழர்கள்-கைமேல் பணம் வைத்தால் தான் எண்ணெய் உண்டு என்றனர். அதையும் சிரித்துக்கொண்டே தாங்கினன். புலியைப் பிடிக்கப் போகிறவன் எறும்பு கடிக்கிறதே என்று ஒப்பாரி வைப்பான்? தனது ஊழியர்களைக் கொண்டு புது வழிகளில் அத்தடைகளைத் தகர்த்திட முனைந்தான். குற்றச்சாட்டுக்களைத் தூக்கி எறிந்தான்! குன்றென நிமிர்ந்து நடந்தான்!

அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு நன்கு தெரியும், சர்க்கரை உற்பத்தியையும் ஏற்றுமதியையும் பாழ்படுத்திஞல்தான் கியூபாவுக்குத் தொல்லை வரும் என்று. அதற்கான நிலைமைகள் உருவானதைக் கண்ட காஸ்ட்ரோ சினந்து கூறினன்: "இங்கே கரும்புத் தோட்டங்களைக் கையில் வைத்திருக்கும் அமெரிக்க முதலாளிகள் எவரேனும் கியூபாவின் சர்க்கரை உற்பத்தியைக் கெடுப்போம் என்றெண்ணிஞல், உறுதியாகச் சொல்வேன்! அவர்களின் கால்நகம்கூடக் கியூபாவின் மண்ணில் படமுடியாது! எங்களை இந்த வழிகளில் வீழ்த்திவிடலாம் என்று அமெரிக்கர் எவரேனும் கனவு கண்டால், அறுதியிட்டுச் சொல்கிறேன்; அவர்களின் முதலீடுகளைச் சத விகிதத்திற்குச் சத விகிதம் நான் கைப்பற்றியே தீர்வேன்! அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து எந்தப் பொருளும் இங்கு இறக்குமதியாகாது செய்வோம்! உலகம் பெரியது! எவர்கள் எங்களிடம் வாங்குகின்றனரோ, அவர்களிடம் நாங்கள் வாங்குவோம்!' இடியுண்ட நாகமென இப்போது விழிக்கின்றனர், ஆணவம் பேசிய அமெரிக்க முதலாளிகள்!

கியூபாவின் தொல்லைகள் இத்தோடு தீர்ந்து விடவில்லை. ஆயிரம் சேதிகள் இன்னும் ஆராயப்படவிருக்கின்றன. இழந்த அமெரிக்க ஐக்கிய நாட்டுச் சந்தைக்குப் பதிலாகப் புதிய சந்தைகளைப் பெறுதல் அதற்குள்ள கடன். இப்போது அவர்களுக்குள்ள ஒரே நம்பிக்கை சோவியத் உருசியாதான். சப்பானும் மேற்கு செர்மனியும் அமெரிக்க நாடுகளின் செவ்விழிகளுக்கு அஞ்சாமல் மேலும் அதிக அளவில் கியூபாவின் சர்க்கரையைப் பெறுமா என்பது ஆராயக்கூடியதே! உருசியா தன் நிலையை ஆராய்கிறது. உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத அளவு கரும்புத் தோட்டங்கள் சோவியத் உருசியாவில் உள்ளன. அது வெளிநாடுகளிடமிருந்து சர்க்கரை பெற்றுத்தான் ஆக வேண்டுமென்பதில்லை. இப்போது கரும்பு விளையும் 20 இலட்சத்து 10 ஆயிரம் எக்டார்களில் கணிசமான அளவுத் தோட்டங்களை, வேறு பொருள் சாகுபடிக்குப் பயன்படுத்திஞல் உருசியாவின் வேறு தேவைகள் நிறைவேறலாம். அதே நேரத்தில் கியூபா சர்க்கரையைப் பெற்றுக்கொண்டு எண்ணெயைத் தரலாம். அமெரிக்காவில் கியூபாவின் சர்க்கரைக்கு உலகிலேயே மிகுதியான விலை கிடைத்தது: அதே விலை உருசியாவிலும் கிடைக்க வேண்டும்!

அமெரிக்கா விடுத்திருக்கும் பொருளாதார முற்றுகை கியூபாவின் வாழ்வைப் பாதிக்கவும் செய்யலாம். ஆனுலும் துடிப்புள்ள கியூபன் இளைஞர்கள் அவற்றை எல்லாம் கண்டு தொடை நடுங்கவில்லை. வணிக முற்றுகையைக் கண்டு வளைந்து கொடுக்கவுமில்லை!

எந்தப் பொருளியல் நெருக்கடி வந்தாலும் சரி! அது கியூபன் மக்களின் உறுதியைக் குலைத்திட முடியாது! பொருளியல் வளர்ச்சியையும் தன்னுட்சி உரிமையையும் சிதைத்திட முடியாது! அழித்திடமுடியாது! இது உண்மை! உறுதி! உயிரின் சேதி!

"எங்களுக்கு, புரட்சி என்ருல் அது அரசியல், பொருளியல், சமூகம், கலைப்பண்பு ஆகியவற்றின் மொத்த விடுதலையையும் குறிக்கிறது. வரலாற்றில் முதன் முறையாக, எங்கள் மக்களுடைய தன்மானமும் விடுதலையும் தன்னுட்சியும் நிலை நாட்டப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு விட்டன. எமது முன்னேர்களான அடிமைகள் புரிந்து கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ தவறிவிட்ட அடிப்படையான உண்மையை, இன்று நாங்கள் நிலை நாட்டுகிறேம்; எங்கள் அரசியல் தன்னிச்சையோடியங்கவும், நாங்களே எல்லாத் துறைகளிலும் எங்கள் விதியை நிர்ணயித்துக் கொள்ளவும் ஆன நிலையை நாங்கள் அடைவோம்.

எப்படியாயினும், அரசியல் விடுதலை என்பது சமூக நீதியும் பொருளியல் விடுதலையும் உடன் அமையப்பெருவிடின், அதன் பெயருக்குத் தகுதியானதில்லை. எங்கள் புரட்சியின் இரண்டாவது கட்டம் சந்திக்கும் முக்கியக்குறிக்கோள்கள் இவையே!

சென்ற காலத்தில் முழுவதும் கவனிக்கப்படாது விட்டுவிடப்பட்ட தொழில் வளர்ச்சிக்கு, இன்று வித்திடுகிறேம்!

அவர்கள் வெள்ளையர்களானுலும் சரி; கறுப்பர்களானுலும் சரி; எங்களது எல்லா மக்களுக்கும் சமூகத்தில், கலைப்பண்பில், இனத்தில் சமத்துவம் நிலவுவதற்கு உத்தரவாதம் அளித்திருக்கிறது, எங்கள் அரசு! நிறவேற்றுமை எங்கும் கிடையாது!

எங்களது போராட்டம் ஒரு வகையில், ஏழ்மையையும் பிற்போக்கு நிலையையும் எதிர்த்து நடத்தப்படும். உலகப் போராட்டத்தின் ஒருபகுதி!"

--இதுதான் பிடெல் காஸ்ட்ரோவின் குரல்!

—மா. பாண்டியன்.

★ ★ ★

கன்னித் தமிழ்த் தொண்டு!

சென்னையில் செந்தமிழ் வளர்க்கும் நக்கீரர் கழகம் பற்றித் "தென்றல்" தோழர்கள் அறிவர் தெருவெலாம் தமிழ் பரப்பும் தொண்டர் சிறுவை மோகனசுந்தரம் அவர்களின் அரிய பணியும் தமிழகத்திற்கு அறிமுகமே! அன்னுர் நக்கீரர் கழகத்தின் சார்பில் நடத்திவரும் டாக்டர் தருமாம்பாள் பெண்கள் இலக்கிய வகுப்பும் நண்பர்களுக்குத் தெரிந்ததே!

கடந்த ஓராண்டாகத் தெள்ளுதமிழ்ப் பணியைச் செய்துவரும் அவ்விலக்கிய வகுப்பின் முதல் ஆண்டு நிறைவு விழா கடந்த 9-7-60 அன்று எழிலுறக் கொண்டாடப்பெற்றது. மதிப்பிற்குரிய வெற்றிச்செல்வி அன்பழகன் அவர்கள் தலைமை வகித்தார்கள். இலக்கிய வகுப்பின் அரிய பணிகளை விதந்து பேசினுர்கள்.

விழாவில் ஏழைக்குழந்தைகள் நூறு பேருக்குக் கரும்பலகை, வாய்ப்பாடு, பென்சில், குச்சி, அடிக்கோல் முதலியன வழங்கப்பட்டன. 22 பெண்குழந்தைகளுக்கு மேலாடைகளும் வழங்கப்பட்டன. வசதி உள்ளவர்களிடமிருந்து திரட்டி, வழியற்றவர்களுக்குத் தரும் இப்பணியை ஆற்றிய நக்கீரர் கழகத்தார் மற்றெரு தொண்டினையும் ஆற்றினர். மகளிர் கல்லூரி மாணவிகளுக்கெனக் கட்டுரைப் போட்டி ஒன்றையும் டாக்டர் தருமாம்பாள் நினைவாக நடத்தினர். அதில் வென்ற மாணவிகளுக்கும் இவ்விழாவில் பரிசுகள்-கேடயம், வெள்ளிக்கோப்பை, நூல்கள் முதலியன-வழங்கப்பட்டன. கட்டுரைப் போட்டிப்பரிசுகளை வழங்கி மாணவியரை வாழ்த்தினுர், திருமதி பெரியநாயகி சிதம்பரநாதன் அவர்கள். ஏழைக்குழந்தைகளுக்கு கரும்பலகை முதலியவற்றை வழங்கி வாழ்த்தினுர், திருமதி சரசுவதி உலகநாதன்.

இதே விழாவில் திருமதி பாகீரதி அவர்கள் திருக்குறள் வகுப்பைத் தொடக்கி வைத்தார்கள்.

விழா நிகழ்ச்சிகளைக் கீழே காண்கிறீர்கள். வெற்றி பெற்ற கட்டுரைகள் விரைவில் தென்றலில் வெளியாகும்.

நக்கீரர் கழகத்தாரின் தொண்டு நாளும் வளர்க! மேலும் உயர்க!

—ஆசிரியர்.

13. நடராசன் ஓடிவிட்டான்.

வீட்டிலே பணம் கொண்டுவந்து தரவில்லை யென்று சொல்லி நச்சரித்தாளாம் மனைவி, அதைத் தாங்கமாட்டாமல், சீட்டாடக் கிளப்புக்குப் போனான், அங்கே யிருந்தவர்கள் அவனைப் பழைய பாக்கி கேட்டுத் துன்புறுத்தினார்களாம், - மனக்கஷ்டத்தை மறப்பதற்காக ஒருவன் சினிமாப்படம் பார்க்கப் போனானும். அங்கே படத்தில் ஓடிய கதையோ சோகக்கதையாக இருந்ததாம். அது அவனுடைய மனத்துயரத்தை அதிகப்படுத்தவே உதவியதாம். - மனிதர்கள் பெரும்பாலான சமயங்களில் இப்படித்தான், அழுக்குத் தீரக் குளிக்கலாம் என்று எண்ணிக் கொண்டு, சேற்றிலே இறங்கியவன் கதை போல, தங்கள் துன்பத்தைத் தீர்க்க முயன்று மேலும் துன்பப் படும் நிலையை அடைகிறார்கள்.

தங்கமும் இப்படித்தான் தன் மனக் குழப்பத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணிக் கொண்டு ராதா வீட்டிற்குப் போனபின் மேலும் குழம்பிய மனத்தோடு வீட்டுக்குத் திரும்பி வந்து சேர்ந்தாள். அவளால் வீட்டில் இருக்கவே முடியவில்லை. ஆகவே தோட்டத்திற்குள் நுழைந்து மல்லிகைப் பந்தலின் அடியில், மாலை வெயில் அவளுடைய பொன்வண்ண மேனிக்கு முலாம் பூசி அழகு செய்ய, ஓவியச்சிலைபோல் உட்கார்ந்து சிந்தனை வயப்பட்டு இருந்தாள். அவள் எவ்வளவு முயன்றும், ராதாவின் பேச்சுக்களை மறக்கவே முடியவில்லை. அவள் நடராசனைப் பற்றிக் கூறிய ஒவ்வொரு வரியும் அவள் உள்ளத்தில் ஒவ்வொரு படி அவனைப் பற்றிய மதிப்பை உயர்த்தி ஏற்றுவதாவே யிருந்தது.

இவ்வளவு நாளும் தங்கம் நடராசனை மிகவும் சாதாரணமாகவே எண்ணிக் கொண்டிருந்தாள். இப்போது ராதா பேசியதைப் பார்க்கும்போது, அதே நடராசன் எங்கோ ஒரு பெரிய குன்றின் மீது மிக உயரமான முடியின் உச்சியில் ஒளி வீசுகின்ற பெருஞ்சோதி போலத் தோன்றினான். இவ்வளவு நாளும் தனக்கு அவனைப்பற்றி இம்மாதிரியான கருத்துத் தோன்றாதபோது, ராதாவுக்கு மட்டும் எப்படித் தோன்றியது என்று அவள் ஆச்சரியப்பட்டாள்.

ஒரு வேளை ராதா அவன் மீது கொண்டுள்ள காதலால் அவனை இவ்வளவு உயர்த்திப் பேசுவதாயிருக்கக் கூடும் என்ற எண்ணம் தங்கத்தின் இதயத்தில் திரும்பத்திரும்பத் தலை தூக்கியது. ஆனால் அதே சமயம் தான் விரும்புகின்ற தன் அத்தான் மீது தனக்கு இவ்வளவு மகோன்னதமான கருத்து எதுவும் உண்டாக வில்லையே என்றும் தங்கம் எண்ணினாள். அத்தான் சுந்தரேசனுடைய நினைப்பு வந்ததும், அவளுக்கு, நடராசன் மதிப்பை எடை போட ஓர் அளவு கோல் கிடைத்தது போலாயிற்று.

நடராசனுக்கும் அத்தான் சுந்தரேசனுக்கும் இடையேயுள்ள பண்பு, பாகுபடுகளை அவள் ஒப்பிட்டுப் பார்த்தாள். நடராசன் நல்லவன்; களங்கமற்றவன் உயர்ந்த பழக்க வழக்கங்களும், பண்பு நலங்களும் சிறக்கப் பெற்றவன். ஆனால், எவ்வளவு இருந்தாலும் அவன் அத்தான் சுந்தரேசனைக் காட்டிலும் மட்டமானவனாகவே அவளுக்குத் தோன்றினான். அத்தான் சுந்தரேசனுடைய ஒரு புன்சிரிப்புக்கு முன் இத்தனை குணப்பண்புகளும் தலை குனிந்தோட வேண்டியதுதான். அத்தானுக்கு இந்த நல்ல குணங்கள் குறைவு தான் என்றாலும், அவரிடமிருந்த கவர்ச்சிக்கு முன் இவையெல்லாம் என்ன செய்தும் தலை தூக்கமுடியவில்லை, தன் அத்தானுக்கு முன்னால், நடராசன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கே உரியவனல்ல என்று கூட அவள் மனம் முடிவுகட்டியது. ஆனால், அவனைப் பற்றி ராதா இவ்வளவு பெரிதாக எண்ணிக் கொண்டிருக்கிறாளே என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆச்சரியப் படும் படியாக அவள் கொண்ட வியப்புணர்ச்சியை மாற்றிக் கொள்ளும் படியான நிகழ்ச்சி ஒன்று அப்போது நடந்தது. நடராசனே அவள் முன்னால் அப்போது வந்து நின்றான்.

ஆம்! உண்மையில் அப்போது நடராசன் தான் அவள் முன்னே வந்து நின்றான். சுந்தரேசன் இருந்தவரை, அவனுடன் ஏதாவது வீண் சச்சரவு ஏற்படக் கூடும் என்ற எண்ணத்தில் அவன் தங்கத்துடன் நெருங்கிப் பேச முனையாமல் இருந்தான். இப்போது, சுந்தரேசன் இல்லாத படியால் தான் அவளைக் கண்டு பேசலாமென்று முடிவு கட்டிக்கொண்டு அவன் அங்கே வந்து சேர்ந்தான்.

ராதா சொன்ன விஷயங்களை மனத்தில் வைத்துக் கொண்டே அவள் அவனை நிமிர்ந்து நோக்கினாள். அவனைப் பார்க்கப் பார்க்க அவளுக்கும் ராதவின் இதயத்தில் ஏற்பட்ட அந்த உயர்வான எண்ணங்களே உண்டாயின. இனிமையாக டங்காரம் செய்து கொண்டிருந்த வீணையின் தந்திக் கம்பிகள் திடீரென்று அறுந்து தெறித்ததைப் போல அவளுடைய பார்வை பையப் பைய அவள் முகத்தை விட்டு இறங்கி வந்தபோது அந்தக் குறைபட்ட கையைக் கண்டவுடன், அவனைப்பற்றி அவளுக்கு ஏற்பட்ட அந்த உயர்ந்த எண்ணங்களெல்லாம் சடாரென்று மாறி விட்டன.

பண்பிலும், பழக்க வழக்கத்திலும் நேர்மையிலும் நாணயத்திலும், உண்மையிலும் ஒழுக்கத்திலும் எத்தனையோ குறைகள் உள்ள சுந்தரேசன் அவளுக்கு உயர்ந்தவனாகத் தோன்றினான். ஆனால், எல்லா வகையிலும் நிறைவான நடராசன். அந்த ஒருகை, குறைவாக இருந்த காரணத்தால்மட்டுமே பிடிக்காதவனாகிவிட்டான்.

ராதாவுடன் பேசிக் கொண்டிருந்த போதுகூடத் தங்கம் இப்படித் தான் எண்ணினாள். எல்லா வகையிலும் நடராசன் உயர்ந்தவர் தான். ஆனால் அந்தக்கை மட்டும் ஒழுங்காக இருந்து விட்டால்...! அந்த ஒரு காரணம் மட்டும் போதுமா, அவனை வெறுத்தொதுக்க! இல்லை. அவளையறியாமல் வேறு ஏதேனும் காரணமிருக்குமா? தெரியவில்லை. ஆனால், சுந்தரேசனைப் பற்றி நினைக்கும்போதுமட்டும், அவனுடைய குறைகளைப் பற்றி எண்ணிப் பார்க்கவே அவள் தன் இதயத்தை விடுவதில்லை.

இப்படிப்பட்ட மன நிலையில் இருந்த தங்கத்திடம் நடராசன் கேட்கவந்த விஷயத்தை நினைத்துப் பார்த்தால், நிலைமை தெரியாத பேச்சாகத்தான் அது தோன்றும்.

'தங்கம், உன்னிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன்' என்று பேச்சைத் தொடங்கினான் நடராசன்.

தங்கம் பதில் எதுவும் சொல்லவில்லை. ஆனால், அவன் சொல்லுவதைக் கேட்கத் தயாராக இருந்தாள்.

'தங்கம், உன்மனத்தில் என்ன இருக்குமோ எனக்குத் தெரியாது. ஆனால் என் மனத்தில்உள்ளதை நான் சொல்லி விடுகிறேன். கேள்! கேட்டு அது பற்றிய உன் கருத்தைக் கூறு. பல நாட்களுக்கு முன்னால், என் தந்தையும் உன் தந்தையும் கூடி நமக்குத் திருமணம் செய்து வைப்பது பற்றி ஆலோசித்தார்களாம். அப்போது நான் பைத்தியக்காரனாக இருந்ததை முன்னிட்டு. ஒரு முடிவும் ஆகவில்லையாம். நீ மறுத்தாயோ, அல்லது உன் தாய்தந்தையர் மறுத்தார்களோ தெரியாது. ஆனால், இப்போது நான் பைத்தியமல்ல—இனி நான் பைத்தியமாகவும் மாறமாட்டேன் என்று எனக்கு உறுதியாகத் தெரிகிறது. ஆகையால் தான் நான் உன்னிடம் இது பற்றிப் பேசத் துணிந்தேன். உனக்கு என் மேல் அன்புண்டா? அப்படிச் சிறிதாவது அன்பிருக்குமானால், என் வாழ்வில் ஒளி சேர்க்க என் இல்லத் துணைவியாக நீ வருவாயா? இதை அறிந்து கொள்ளவே நான் உன்னை நாடி வந்தேன்' என்றான் நடராசன்.

அவன் பேச்சு, காதலனுடையதைப் போல் இல்லை. அப்படி யிருந்திருக்குமானால் தங்கம் அவ்வளவு நேரம் அதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு இருந்திருப்பாளா என்பதும் ஐயம்தான்! முன்னமேயே அவளிடம் இன்னதுதான் பேச வேண்டுமென்று திட்டவட்டமாக முடிவு செய்து கொண்டு வந்தவனைப்போல் அவன் பேசினான். ஆனால், அந்தப் பேச்சிலும், அவன் தங்கத்தின் மேல் கொண்டிருந்த அளவு கடந்த காதல் வெளிப்பட்டுத் தோன்றாமலில்லை.

தங்கமும் திட்டவட்டமாகத் தெரிவித்தாள், "தயவு செய்து இது பற்றி

இனிமேல் என்னிடம் பேசாதீர்கள்.'' என்று.

நடராசனும் ஆதரவான பதிலே நிச்சயமாகக் கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டு வரவில்லை. சந்தேகமான மனநிலையுடன்தான் வந்திருந்தான். ஆகவே, ஒன்றை எதிர்பார்த்துத்தான் ஏமாற்றமடைந்த அதிர்ச்சி அவனிடம் காணப்படவில்லை. இருந்தாலும், அவன் உள்ளத்தின் அடித்தளத்திலே இந்த ஏமாற்றம் போய்த்தாக்கி அதைத் துண்டுபண்ணாமலும் விடவில்லை. உள்ளம் உடைந்தது வெளிப்பட்டுத் தோன்றாத நிலையில் நடராசன் அமைதியான போக்கில் சிறிதும் கலங்காதவனைப் போல நின்றான். பிறகு வாயெடுத்துக் கேட்டான்.

"அப்படியானால், தங்கம், உனக்கு என்மீது அன்புகிடையாதா"

"அன்பு உண்டு—ஆனால், காதல் கிடையாது!—உங்களைக் காதலிக்க இன்னொருத்தி இருக்கிறாள்!" என்றாள் தங்கம். ஆனால், அவன் சொன்ன இரண்டாவது விஷயத்தைக் காதில் வாங்கிக்கொள்ளாமலே அவன் விடுவிடுவென்று நடந்து போய்விட்டான். காதல்கிடையாது. என்ற அந்த வார்த்தைகள் ஏற்கனவே உள்ளுக்குள் உடைந்திருந்த இதயத்தைச் சல்லிசல்லியாக்கி விட்டனவோ என்னவோ, மேலும் நிற்காமல் விடுவிடுவென்று நடந்து தோட்டத்தை விட்டு வெளியேறி விட்டான். தங்கம் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

ஆனால், மறுநாள் மாலை முருகேச வாத்தியார் கந்தசாமி வாத்தியாரைத் தேடிக் கொண்டு வந்தபோது தான், தங்கத்திற்குக் கவலை ஏற்பட ஆரம்பித்தது. முருகேச வாத்தியார் வீட்டுக்குள் நுழையும் போதே அவர் முகத்தில் பதற்றத்தின் அறிகுறி தென்பட்டது. உள்ளே வந்ததும், அவர் படபடவென்று, "ஐயோ! கந்தசாமி, நேற்றிலிருந்து நடராசனைக் காணவில்லையே!" என்று கதற ஆரம்பித்துவிட்டார். மேலேயிருந்த அண்ணாமலைப் பண்டிதர் அப்போது கீழே இறங்கி வந்தார். அவரைப் பார்த்தவுடன் முருகேசர் சின்னக் குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழுது கொண்டே, "ஐயா, எவ்வளவு அருமையாக வளர்த்தேன். என்றும் என் சொல்லுக்கு மீறிப் பேசாதவன் அந்தப் பிள்ளை—இப்பொழுது எங்கு போனானோ தெரியவில்லையே! பைத்தியக் காரனாக இருந்தபோதுகூட என் அனுமதியில்லாமல் எதுவும் செய்யமாட்டானே! இப்போது நேற்றிலிருந்து காணவில்லையே!" என்று பதைத்துப்பதறி அவர் கதறிய காட்சியைக் காணக் கஷ்டமாயிருந்தது.

"எங்கேயாவது போயிருப்பான். சொல்லிவிட்டுப்போக சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. திரும்பிவந்துவிடுவான். ஆண்பிள்ளை காணாமற்போனதற்கு நீங்கள் இப்படிப் பெண்பிள்ளை போல் அழுவது நன்றாக இல்லையே!" என்று சொன்னார் அண்ணாமலைப் பண்டிதர்.

"ஐயா, அவன் சொல்லாமற் போயிருந்தால் நான் இவ்வளவு கவலைப்படமாட்டேன். அன்று தங்கத்தைத் தேடி அவன் போனதைப் பற்றிக் கூட நான் கவனிக்கவேயில்லையே. இப்போது கடிதம் எழுதிவைத்துவிட்டுப் போயிருக்கிறானே, அது தானே எனக்குக் கவலையளிக்கிறது!' என்று சொல்லித் தன் பையிலிருந்த ஒரு கடிதத் துண்டை எடுத்து அண்ணாமலைப் பண்டிதரிடம் கொடுத்தார். கொடுக்கும்போது அவர்கைகள் நடுங்கின.

அண்ணாமலைப் பண்டிதர் முதலில் அந்தக் கடிதத்தை மனத்துக்குள் படித்துக் கொண்டார். பிறகு, கந்தசாமி வாத்தியார் முதலியவர்கள் அதன் உள்ளடக்கத்தை அறிய ஆவலுடையவர்களாயிருப்பதைக் கண்டு, அதை வாய்விட்டுப் படிக்கலானார்.

வணக்கத்திற்குரிய தந்தையார்
அவர்களுக்கு,

நடராசன் பணிவுடன் எழுதிக் கொள்ளும் கடிதம். சின்ன வயதிலிருந்து என்னைப் பெற்றவர்களினும் உயர்வாகப் பேணி வளர்த்த உங்களுடைய அன்புக்கு முற்றிலும் கடமைப்பட்டவன் நான். என்றாலும், சில நாட்களாக என்மனத்திலே ஏற்பட்டு வந்த ஒரு ஒரு குறைகாரணமாக, என்னால் இந்த ஊரில் மன அமைதியோடு இருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, நான் எங்காவது ஒரு தூர தேசத்தில் போய் சில நாட்களைக் கழித்து - உலகானுபவத்தையும் பெற்றுத் திரும்பிவர எண்ணியுள்ளேன். என்பிரிவைத் தாங்கள் பொறுக்க மாட்டீர்கள் என்பது எனக்குத்தெரியும், ஆனால், எனக்காகப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன். என்னிடம் அன்பு பாராட்டி வரும் கந்தசாமி வாத்தியார், அண்ணாமலைப் பண்டிதர் இருவருக்கும் என் நன்றியதலைக் கூறுங்கள்.

இப்படிக்குத் தங்களை என்றும்
மறவாத மகன்,
நடராசன்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் எல்லோரும் அசைவற்று நின்றார்கள். அவர்கள் எல்லோருடைய உடலும் கற்சிலைபோல் நின்றனவே தவிர, அவர்களின் உள்ளங்கள் எல்லாம், அலைகடல்போல் கொந்தளித்துக்கொண்டிருந்தன. அண்ணாமலைப் பண்டிதர் ஒருவர்தான் நிலை குலையாத நெஞ்சுடன் இருந்தார். மற்றவர்கள் எல்லோரும் பெருத்த கவலையோடு பலப் பலவாறு எண்ணங்களை செல்லவிட்டுக் கொண்டிருந்தார்கள். தங்கத்தின் நிலை தான் மிகப் பரிதாபமாயிருந்தது.

நடராசன், தன்னுடைய மறுதலிப்பைக் கேட்டுவிட்டுத் தான் மனமுடைந்து ஊரைவிட்டுப் போய்விட்டான் என்பது அவளுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. அவன் தன் மேல் கொண்டிருந்த காதலை மறக்கத்தான் ஊரைவிட்டுப்போக முடிவு செய்திருக்கிறான் என்பதை அவள் நன்றாக உணர்ந்தாள், அவன் மீது அவளுக்கு அன்பு இருந்தது; இப்போது இரக்கமும் பிறந்தது. ஆனால், அந்த அன்போ. இரக்கமோ, அவன் மீது காதல் கொள்ளும்படியாகத் தூண்டக்கூடிய ஆற்றல் பெற்றனவாக இல்லை. அவன் ஆசையைத்தான் நிறைவேற்ற முடியாத நிலையில் இருப்பதற்காக அவள் வருந்தினாள், தனக்கு அவனைப் பிடிக்கவில்லை என்பது தெரிந்தால், அவன் மனத்தை யடக்கிக்கொண்டு பேசாமல் இருந்திருக்க வேண்டும் என்றுதான் அவளுக்குத் தோன்றியது. இவ்வளவு பேருடைய மனமும் சஞ்சலப்படும்படி செய்துவிட்டு ஏன் ஊரை விட்டு ஓடவேண்டும். மனத்தை அடக்கிக் கொள்ள முடியாதவர்கள் எப்படித்தான் உலகத்தில்வாழ முடியும்? என்றெல்லாம் அவள் எண்ணினாள். ராதாவைப் பற்றி நினைக்கும் போதுதான் அவளுக்குப் பகீர் என்றது. நடராசன் ஊரை விட்டே போய்விட்டசெய்தி அறிந்தால், அவள் எவ்வளவு துன்பப்படுவாள் என்று எண்ணிப்பார்க்கவே முடியவில்லை. பாவம்! அவன் தன்னைத் காதலித்ததன் காரணமாக ஓடிவிட்டான் என்று அறிந்தால் அவளுக்கு இன்னும் எவ்வளவு துயரமாயிருக்கும் என்று எண்ணியபோது தங்கத்தாலேயே தாள முடியவில்லை.

அண்ணாமலைப் பண்டிதர் அப்போது கேட்ட கேள்வி தங்கத்தை மேலும் குடைவதாயிருந்தது.

"இங்குள்ளவர்கள் யாரிடமும் நடராசன் போவதற்கு முன்னால் எதுவும் சொல்லவில்லையா?" என்று கேட்டார். பண்டிதர்.

யாரும் பதில் கூறவில்லை.

மறுபடியும், அவர் தங்கத்தை நோக்கி, "ஏன் தங்கம், உன்னிடம்கூட நடராசன் எதுவும் கூறவில்லையா?" என்று கேட்டார். தங்கம் திடுக்கிட்டுத் திரும்பி அவரை நோக்கினாள். கூர்மையான அவருடைய கண்களை அவளால் சந்திக்க முடியவில்லை. சட்டென்று தலையைத் தாழ்த்திக் கொண்டாள். நடந்ததைக் கூறினால். மற்றவர்கள் தன் மீது கோபமும் வெறுப்பும் கொள்ளக் கூடுமென்பது உறுதி. அதிலும், முருகேச வாத்தியாருக்கு — தன்னால் தான் நடராசன் மனவருத்தப் பட்டுப் போட்விட்டான் என்ற எண்ணம் ஏற்பட்டால்—எப்படி யிருக்கும் என்று தோன்றியது. ஆகவே, 'நான் அவரைப் பார்க்கவே யில்லையே' என்று ஒரு சிறு பொய்யைச் சொல்லி வைத்தாள். அந்தப் பொய் சின்னதாயிருந்தாலும் அவளைப் பெரிய நெருக்கடியொன்றிலிருந்து தப்பச் செய்துவிட்டது.

பிறகு ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியான கருத்தைக் கூறினார்கள், ஆலோசனைகள் நெடுநேரம் நடந்து கொண்டிருந்தன. தங்கம் அந்தப் பேச்சுக்களின் போக்கைக் கவனித்துக் கொண்டிருந்தாளே தவிர அவற்றில் கலந்துகொள்ளவில்லை. கடைசியில் அண்ணாமலைப் பண்டிதர்தான் எல்லோரையும் சமாதானப்படுத்தினார். "நடராசன் என்ன சின்னப் பிள்ளையா? அவனுக்கிருக்கிற அறிவுக்கு அவன் எங்கே போனாலும் பிழைத்துக்கொள்வான். அவன் பிழைத்து நன்றாக இருக்க வேண்டுமென்று வாழ்த்தி விட்டுப் பேசாமல் இருங்கள். அவனுக்கு எவ்விதமான ஆபத்தும் ஏற்படாது!' என்று கூறினார். அது எல்லோருக்கும் சிறிது மனவருத்தத்தைக் குறைப்பதாக இருந்தது அதன் பிறகு முருகேச வாத்தியார் தம் வீட்டிற்குத் திரும்பிச் சென்றார். அண்ணாமலைப் பண்டிதரின் விளக்க மொழிகளைக் கேட்டதனால்தான் அவர் அங்கிருந்து போனார் என்று கூற வேண்டும்-

பேச்செல்லாம் முடிந்தபிறகு, தங்கம் தோட்டத்துக்குள் நுழைந்தாள். அவள் முகம் ஒரே வாட்டமாயிருந்தது. அவள் மனம் இதற்கும் உனக்கும் எவ்விதமான சம்பந்தமுமில்லை; நடராசன் ஊரைவிட்டுப் போனதற்கு நீ எப்படிப் பொறுப்பாளியாவாய்? என்று எடுத்தெடுத்துக் கூறியபோதிலும், அவளால் துன்பத்தை வெல்ல முடியவில்லை.

வேதனை நிறைந்த உள்ளத்தோடு அவள் மல்லிகைப் பந்தலை நோக்கிச் சென்றாள். அவள் பந்தலையடைந்து அங்கே உட்கார முயன்றபோது, பின்னால் யாரோ வரும் காலடி யோசை கேட்டது.

திரும்பிப் பார்த்தாள்.

அவள்முன் அண்ணாமலைப் பண்டிதர் குறும்பாகப் பார்த்துக் கொண்டு நின்றார்.

அவரைக்கண்டவுடன் தங்கத்துக்கு உடலெல்லாம் உதற லெடுக்க ஆரம்பித்துவிட்டது.

ஆசிரியர் கண்ணதாசன்

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் மாநாடு வருகிற ஆகஸ்ட் திங்களில் நடைபெறவிருக்கிறது. அதில் வரவேற்புக் குழுத் தலைவராகப் பணியாற்றும்படி ஆசிரியர் கண்ணதாசன் அவர்களை ஒரு கடிதத்தின் மூலமாகக் கேட்டுக்கொண்டதற்கிணங்கி, ஆசிரியர் தன் ஒப்புதலை அளித்திருக்கிறார்.

★

கடந்த 14-7-60 அன்று மாலை சென்னை அடையாற்றில் உள்ள ஔவை இல்லத்தில் ஆசிரியர் கண்ணதாசன் அவர்கள் இலக்கியப் பெண்டிர்பற்றி விரிவுரையாற்றினார்கள். கூட்ட முடிவில் ஔவை இல்ல வளர்ச்சி நிதிக்காக, ஆசிரியர் கண்ணதாசன் அவர்கள் ரு 10,000 நன்கொடையளித்தார்கள்.

★

கண்ணீரா? சிரிப்பா?

கடந்த 11-6-60-ம் நாள் தென்றலில் நண்பர் நீலமலையான் என்பார் "கண்ணீரும் சிரிப்பும்" என்று ஒரு கட்டுரை எழுதி இருந்தார். அதனை நினைக்கும்போது எனக்குக் கண்ணீரும் சிரிப்புந்தான் வருகின்றன. அந்தக் கட்டுரை முழுவதையும் மறுக்க ஆசைப்படாவிட்டாலும், பெரும்பாலும் உறுதியாக மறுக்கிறேன். கட்டுரையாளர் கண்ணீரையும் சிரிப்பையும் எழுதுவதற்கு முன் ஒரு நிறைகோலை (தராசு) எடுத்துக்கொண்டு ஒரு தட்டில் கண்ணீரையும் மறு தட்டில் சிரிப்பையும் போட்டு நிறுத்து இருக்கிறரே தவிர, இரண்டையும் தனித் தனியாக நிறுத்துப் பார்க்க மறுத்து இருக்கிறர். அப்படி அவர் முதலில் நிறுத்துப் பார்க்கும்போதுகூட நிறை காட்டும் நடுமுள் உடைந்துவிட்டது. அந்த நடுமுள் முன்பு இருந்ததா என்பதுகூட ஐயப்படும் அளவுக்கு கட்டுரையை நடத்திச் சென்றிருக்கிறர்.

மனிதனுடைய உடம்பில் தான் இரண்டு கண்கள் இருக்கின்றன. அவனுடைய உள்ளத்தில் ஆயிரக்கணக்கான கண்கள் இருக்கின்றன. உடம்புக் கண்களின் வேலை பெரும்பாலும் அழுவதாக இல்லை. ஆனல் உள்ளக் கண்களுக்கு பெரும்பாலும் அழுவதுதான் வேலை. உள்ளக் கண்களில் குறைந்தது ஒரே ஒரு கண்ணவது எப்பொழுதும் அழுதுகொண்டுதான் இருக்கிறது. உள்ளக் கண்கள் எல்லாம் சேர்ந்து அழுகின்ற காலம் எதுவோ? அதுதான் உடல் கண்கள் இரண்டும் அழத் தொடங்கும் காலம். எப்பொழுதும் அழுகின்ற ஒரே ஒரு உள்ளக் கண், எப்பொழுதாவது அழாமல் இருக்குமானல் அதுதான் மனிதன் சிரிக்கும் காலம். எனவே அழுகைதான் அதிகம்.

ஞாயிறு புறப்பட்டதும் இருளெல்லாம் போய்விட்டதாகச் சொல்லப்படுவது அறியாமை! ஏனெனில் பூட்டப்பட்டு இருக்கின்ற பெட்டியின் உள்ளே பகல் காலத்தில்கூட இருட்டு இல்லாமல் போவதில்லை. இருள் எப்படி உலகில் அதிகமோ, அதுபோல் துன்பமும் அதிகம். ஒரு சிறு பூவினுடைய வாழ்க்கையை எடுத்துக்கொண்டால் அந்தப் பூ மலர்கிற நேரம்தான் சிரிப்பு; குவிகின்ற நேரம்தான் அழுகை. ஒரு நாள் சிரித்து மலர்ந்த பூ சிறிது நேரத்திற்குப் பிறகு குவிந்துகொண்டு அழுகிறது. அப்பூவினுடைய மலர்ச்சியை விட, குவிந்துகொள்ளும் அழுகைக் காட்சியே அதிகம். அதேபோல் தான் மனிதனுடைய சிரிப்பும் கண்ணீரும் ஆகும். ஆனல் கட்டுரையில் 'கண்ணீர் விட்ட நாட்களை எண்ணி விடலாம் சிரித்த நாட்களை எண்ண முடியாது' என்று கூறுகிறர். அவர் கூற்றுப்படி கண்ணீர் விட்ட நாட்கள் குறைவு என்று தெரிகிறது. இது பெரிய வேடிக்கை! நண்பர், சிரிப்புதான் நிறைய உண்டு என்று நிறுவ முடியுமா?

ஓரிடத்தில் 'உள்ளத்தின் ஒருவித நெகிழ்ச்சிதான் சிரிப்பு' என்கிறர். அதற்கு மாருக மற்ருேர் இடத்தில் 'கண்ணீர் உள்ளத்தைப் பொருத்தது; சிரிப்பு நிலைமையைப் பொருத்தது' என்கிறர். சிரிப்பு உள்ளத்தில் பிறக்கவில்லை; ஏதோ சில நிகழ்ச்சியில்தான் பிறக்கிறது என்பதை அவரால் நிலை நாட்ட முடியுமா?

மேலும் 'தனிமைக்கும் புன்முறுவலுக்கும் இடையில் இன்ப நினைவுகள் இருக்கின்றன' என்றும், 'நான்கு கண்களுக்கும் முறுவலுக்கும் இடையில் காதல் இருக்கிறது' என்றும், கட்டுயைராளர் சிரிப்பிற்கு அடிப்படையைக் கூறி முடித்து விட்டு அதன் பிறகு 'எத்துணைதான் சிரிப்பு சிறந்த தென்றலும் அதற்கு அடிப்படை இருக்கிறது' என்றும் எழுதுகிறர். ஏனையா? முன்பு சிரிப்புக்குச் சொன்ன அடிப்படைகளுக்கு என்ன பொருள்? கண்ணீரில் சிரிப்பு மிதக்கிறது என்பது எப்படி என்று புரியவில்லை. கண்ணீர் துன்பமென்னும் காட்டுமிராண்டியின் ஏகாதிபத்தியம்! சிரிப்பு, இன்பமென்னும் குடியரசுக் கொள்கை மலர்ந்த விடுதலை விளக்கம். சிரிக்கும்போது வருகின்ற கண்ணீர் சீரழிந்துபோன ஏகாதிபத்தியத்தின் கடைசி உருவம்.

இன்னும் "துன்பத்தைத் தாங்குவது மிகக்கடினம்; இன்பத்தை தாங்குவது எளிது" என்கிறர். ஏழ்மையில் உழல்வோர் எதிர் பாராத செல்வமடைந்த போதும், கோழை மனம் படைத்தோர் கோலாகலமான வாழ்க்கையை அடையும்போதும் இன்பமிகுதியால் இதயம் வெடித்து இறந்து விட்டோரை நண்பர் பார்த்தது இல்லையோ? கண்ணீரால் செத்தவர் கணக்கு எவ்வளவோ? அந்தக் கண்ணீருக்கு எவ்வளவு வலிமை உண்டோ அவையனைத்தும் சிரிப்புக்கும் உண்டு என்பதை ஏனே கட்டுரையாளர் மறந்துவிட்டார்.

அடுத்து, "துன்பத்தைக் காலம் வாங்கிக் கொள்கிறது. இன்பத்தை வாங்கிக் கொள்ள ஒன்றும் இல்லை" என்கிறர். ஐயோ! நண்பரே! அடுக்காது இஃது! எங்கே கண்டீர் இம் மெஞ்ஞானத்தை!

> "துன்பத்திற் கியாரே துணை
> யாவார் தாமுடைய
> நெஞ்சம் துணையல் வழி"

என்னு திருவள்ளுவப் பெருந்தகை ஓதியது உணரவில்லையோ? "நீ சிரி! உன்னேடு சிரிக்கப் பலர் வருவர். ஆனல் நீ அழு! அப்போது உன் அருகில் யாரும் வரமாட்டார்கள்" என்று அறிஞர் இங்கர்சால் மொழிந்ததை மறந்தீரோ? இன்பத்தை வங்கிக்கொள்ள ஒன்றுமில்லை என்றீரே—எப்படி?

"என் முன்னேடி ஆசிரியர் மொழிந்து. இருப்பதுபோல் சுகம் தாங்கிகள் இருப்பதில்லை" என்கிறர். நண்பரே! சுமையைச் சுமந்து செல்பவன் சுமை தாங்கியை நாடுவது எதற்காக என்றல், தான் சுமந்த சுமை தன்னல் சுமக்க முடியாத நிலைமை வருகிறபோது தான் சுமை தாங்கியை நாடுகிறன். அதுபோல் சுகத்தை எவனும் தாங்க மறுப்பதில்லை வாயும் வயிறும் வலிக்கட்டும், அப்போதும் சிரிக்கிறன். சுகமாகிய சுமை தன்னை அழித்தாலும் அழிவானே தவிர, அதனை இறக்குவதற்குச் சம்மதிக்க மாட்டான். சுகம் என்னும் இன்பம் எப்படி ஏற்படுகிறது என்பதை நன்பர் அறிந்து கொண்டால் இது தெளிவாகும். "நெஞ்சைப் பொருந்திவருவதுதான், அதாவது மனம் அனுமதிக்கின்ற நிகழ்ச்சிதான் எல்லோருக்கும் இன்பம்" என்கிறர் தொல்காப்பியர்.

"கண்ணீர்க்கு மூன்று காலமும் சொந்தம், சிரிப்புக்கு இறந்த காலம் ஒன்றே சொந்தம்" என்றும், "மனிதன் நடந்து விட்டவைகளைக் கண்டு சிரிக்கிறன், நடக்க இயல்பவைகளைக் கண்டு கண்ணீர் விடுகிறன்" என்றும் எழுதுகிறர். இதை எதற்காக எழுதுகிறர் என்பதை எண்ணும்போது எதற்காகவும் இல்லை என்பது புலப்படுகிறது. கட்டுரையாளர், முன்பே நிலைமையைப் பொருத்துத்தான் சிரிப்பு வருகிறது என்றர். அதன்படி இப்போது நிகழ்கால நிலைமைக்கும் வருங்கால நிலைமைக்கும் அவனும் சிரிக்கமாட்டான் என்று எப்படி ஒப்புவது? நடந்துவிட்டவை எல்லாவற்றுக்கும் எவனும் சிரிப்பதில்லை; நடந்து விட்ட நல்லவைகளுக்குத்தான் சிரிப்பான். நடக்க இருப்பவைகளுக்கும் கண்ணீர் விடுவதும் அப்படியே! நாளைக்கு உனக்குத் திருமணம் ஆகப் போகிறது என்றலோ; நாளைக்கு காதலியின் கடிதம் வரும் என்றலோ 'நாளைக்கு உயர் பதவி கிடைக்கப் போகிறது' உன்னைப் பாராட்டிப் புகழப் போகிறர்கள்' என்றலோ எவனும் அழமாட்டான்.

கண்ணீருக்கு குறுகிய நோக்கம் என்று எழுதுகிறர்—"தெற்கு; மா கடலுக்கு நடுவினிலே அங் கோர் கண்ணற்ற தீவினிலே - தனிக் காட்டில் பெண்கள் புழுங்குகின்றர் அந்தக் கரும்புத் தோட்டத்திலே" — என்று பாரதியார் இலங்கையிலே தமிழர் பட்ட இன்னலுக்காக கலங்கி கண்ணீர் விட்டார். அந்தக் கண்ணீர்க் கவிதைக்கு குறுகிய நோக்கம் என்ற களங்கத்தைக் கட்டுரையாளரால் கற்பிக்க முடியுமா? கவிஞருடைய கண்ணீரும் சிரிப்பும் பொது நோக்கத்தைக் கட்டுரையாளரால் கற்பிக்க முடியுமா? கவிஞருடைய கண்ணீரும் சிரிப்பும் பொது நோக்கத்துக்கே தவிர குறுகிய நோக்கம் என்ற குற்றத்துக்கல்ல.

"பித்தனின் சிப்புக்கும் பிள்ளையின் சிரிப்புக்கும் வேறுபாடு உண்டென்றலும் காரணம் இருப்பதில்லை" என்கிறர். கட்டுரையாளர் கல்லா மழலைக் காவியங்களைப் பெற்று மகிழவில்லை போலும்! குழந்தையின் சிரிப்புக்குக் காரணம் உண்டு; வரையறையும் கட்டாயமும் இல்லை.

ஆண்களின் சிரிப்பிலே இருக்கும் தூய்மை பெண்களின் சிரிப்பிலே இல்லை என்கிறர். ஏன்? கட்டுரையாளர் துறவியோ? பெண்களைப் பிடிக்காதோ? கலைவாணர் சொன்னதுபோல் வஞ்சகர் சிரிப்பும், சூழ்ச்சிக்காரர் சிரிப்பும் இருப்பதில்லையோ? இவைகளின்படி ஆண்கள் வஞ்சச் சிரிப்பு சிரித்தாலும் அது தூய்மையோ? பெண்ணெனில் கற்புடையாரே தவிர, தூய்மையற்ற சிரிப்பு சிரிக்கின்ற நோய்கள் இல்லை.

பெண்கள், ஆண்களைச் சிரிப்பிலிருந்து விலக்கித் தாங்கள் மட்டும் சிரிப்புக்குச் சொந்தமாகிவிடுவர். ஊடல் காலத்தில் ஆண்கள் பெண்களிடம் இரங்குவார்கள். அப்போது பெண்களின் உள்ளத்தில் பெருமிதச் சிரிப்பு பிறக்கும்.

> "நகல்வல்லர் அல்லார்க்கு
> மாயிரு ஞாலம்
> பகலும்பாற் பட்டன் றிருள்"

என்னும் திருக்குறளின்படி மனிதன் சிரிக்கமுடிய தவனுய்ப் போனல், அதற்குக் காரணம் அவனுக்கு உலகம் தெரியவில்லை என்பதுதானே தவிர, கட்டுரையாளரின் கருத்துப்படி 'சூழ்ச்சி, கெடுமதி, ஆகியவற்றிற்கு உரியவன்" என்பதனல் மட்டும் அல்ல.

அடுத்து கட்டுரையாளர், "இடுக்கண் வருங்கால் நகுக என்ற வள்ளுவர் துன்பத்தில் சிரித்து இருப்பாரோ?" என்று கேட்கிறர். அறிஞர்கள், பொதுநலத்தையே பூணும் அணியாகக் கொண்டோர் அனைவரும் அப்போது சிரிப்பர். இடுக்கண் காலத்து சிரிப்பதும் ஒரு நாகரிகம்.

சாக்ரட்டீசைக் கேவலப்படுத்தி ஒரு நாடகம் நடிக்கப்பட்டது அந்த நாடகத்தையும் சாக்ரட்டீசு தன் நண்பர்களுடன் கூடி நகைத்துக் கொண்டே பார்த்தான்.

மேதைகள் எல்லாரும் இடுக்கண் வருங்கால் சிரித்திருக்கிறர்கள், எனவே வள்ளுவரும் இம்மேதைகளுக்கு இளைத்தவர் அல்லர். அவருக்குத் தமிழகம் நன்றி செலுத்தியிருக்குமே தவிர நாடு கடத்தி இருக்காது. வந்திருக்குமாயின் அவர் சிரித்திருப்பார். எனவே வரலாறு கிடைக்காத திருவள்ளுவப் பெருந்தகையைப்பற்றிய சொந்த வாழ்க்கையில், தமிழர்கள் கருத்து தெரிவிப்பது தவறு! இன்னும் சொன்னல் அது குற்றம்! ஔவையார் படம் எடுத்து அதில் திருக்குறளைத் தமிழகம் மதிக்கவில்லை என்ற மடமைக் கருத்தை, மாசுடைய காட்சியை, மன்னிக்கமுடியாத குற்றத்தைத் திரைப் படக்காரர்கள் செய்துவிட்ட செயல் போதும். மீண்டும் மீண்டும் திருக்குறளையும் திருவள்ளுவரையும் இழிவுபடுத்த வேண்டாம். பெற்ற தாயைப் பெருமைப்படுத்துவோம்! அதற்கு மாருக அடி வைக்கவேண்டாம்!

—அறிவொளி.

புது வடிவில்
புத்தக உருவில்

முல்லை

ஆசிரியர்
கண்ணதாசன்
விலை 25 காசுகள்

1960 ஆகஸ்டு முதல் அழகாக
வெளி வருகிறது.

- ஆசிரியர் கண்ணதாசன் எழுதும் அழகிய கவிதை.
- நாரா நாச்சியப்பன் எழுதும் "தெருப்பாடகி" சிறு கதை.
- பெயர்பெற்ற பிரஞ்சு நாவலாசிரியர் அலெக்சாண்டர் டூமாசின் அந்தரங்க வாழ்க்கை இரகசியங்கள்.
- முல்லைவழுதி எழுதும் "ஒற்றைமாலை" கதை.
- இந்தி எதிர்ப்புக் கவிதைகள்.
- புலவர் பொன்னிவளவன், விருதைவாணன் சா. நடராசன், வெள்ளைக்கண்ணுடி இன்னும் பல சிறந்த எழுத்தாளர்கள் எழுதும், சிறுகதைகள், கட்டுரைகள், கதைகள்.

பல சிறப்புப் பகுதிகள்!
நகைச்சுவைத் துணுக்குகள்!!
மூன்று நிற அட்டை !!!

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களுக்கு
விற்பனையாளர்கள் தேவை.
விவரத்திற்கு எழுதுங்கள்:

பொறுப்பாளர், முல்லை, சென்னை—6.

குயிலைப் பழித்த மந்தி! சீக்கியரைப் பழித்த தில்லி!

உலா வருகையில் மன்னர்களின் விழிகளில் ஒளி துள்ளும் காட்சிகளே படும்போலும். இலக்கியங்கள் அப்படித்தான் சொல்கின்றன! புத்தன் வரலாறோ வேறு பல காட்சிகளைக் காட்டுகிறது. பஞ்சணை மஞ்சத்திலே பவளச் செவ்விதழ் அசோதையுடன் வற்றாத இன்பத்தைக் கண்டு கொண்டிருந்தானும். அவனை மணி மண்டபத்துக்குள்ளேயே மன்னன் பூட்டி வைத்திருந்ததால் "உலகமே இன்ப மயம் என்றெண்ணிக்கொண்டிருந்தான் சித்தார்த்தன். வெளியே வந்தபோதுதான் சோக உலகத்தின் போராட்டங்களை அறிந்து கொண்டானும். முத்துச் சிவிகை ஊர்ந்த அவன் மூங்கில் பாடையில் சென்ற பிணத்தைப் பார்த்தான்; உள்ளத்தைக் கலக்கிய பிறவற்றையும் பார்த்தான்; உலகத்தை உணர்ந்துகொண்டான். நானும் வாழ்க்கைப் பாதையின் வளைவு நெளிவுகளை இப்போதுதான் அறிந்து கொண்டேன். நானே பலமுறை இந்த ஆட்சியின் துன்பங்களை உங்களிடம் சொல்லியிருக்கிறேன். இப்போதும் உங்களிடம் சொல்கிறேன்.

அவலம் கொத்தும் இந்தச் சோகக் காட்சிகளைக் கண்டபின் நான் புத்தனுகிவிடவில்லை. பூங்கா மரத்தடிக்குக்கூடப் போய் உட்காரவில்லை. வருகிறது '62. அன்று உங்களோடு நானும் சேர்ந்துதான் முடிவு காணப் போகிறேனே!

x x x

சூலை 4-ந்தேதிவரை எடுத்த கணக்கின்படி 5912 பேர் சிறைக்கூடத்தின் இரும்புக் கதவுகளுக்குள்ளே இருக்கின்றனர். ஒரு ரூபாய் இரண்டு ரூபாயாக ஏழைச் சீக்கியர்கள் பண விடை மூலம் அனுப்பி வைக்கும் தொகையே நாளும் 3000 ரூபாய் முதல் 6000 ரூபாய்வரை வந்து சேர்கிறது. அவர்களின் தலைவர் சீக்கியப் பெரியார் தாராசிங் சிங் சிறைக்குள். ஆனாலும் போராட்டத்தின் வேகமும் குறையவில்லை. அதன் அவசியத்தை உணர்ந்து பொறுப்பை முடிக்கும் சீக்கியர்களின் உற்சாகமும் குன்றவில்லை. மங்கையரிலிருந்து கிழவியர்வரை எனப் பல்பருவப் பெண்டிரும் அணிவகுத்து நிற்கின்றனர். எதற்கும் மருளாத இந்த மறப்படையின் போராட்டத்தைத்தான், நேருவின் கூட்டம் மத வெறிக் கூத்து என்று வருணிக்கிறது. "பிசுபிசுத்தது புரட்சி!" என்று எழுதுகிறது.

வெற்றி நடை போடும் ஒரு வீரப் படையை இப்படி இழித்து உரைக்க, பழித்துப் பேச எவ்வளவு துணிவு வேண்டும்? பொங்கி எழுந்த மறப் படையைப் பொய்க் கணைகளால் பொசுக்கிவிடலாம் என்று நினைக்கின்றனரே! மனச்சான்று இல்லாத விலங்குகளா காங்கிரசார்?

x x x

பிறர் செய்யும் தியாகத்தைப் பழிக்கின்ற காங்கிரசார், தமது கட்சித் தோழர்களின் தியாகத்தையும் மதிக்கவில்லை. அண்மையில் நடந்த ஆந்திரத்துச் சிக்கல் இந்தச் சேதியை நமக்குத் தெரிவிக்கிறது. அகில இந்தியக் காங்கிரசின் செயற் குழுவுக்கு ஆந்திரத்தின் சார்பில் ஆறு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். தியாகப் பரம்பரை என்று தமக்கு மூவர்ணம் பூசிக்கொள்கின்ற காங்கிரசார் இங்கேதான் ஏழைத் தியாகி ஒருவனைத் தூக்கி எறிந்திருக்கின்றனர். ஆந்திரப் பிரதேசக் காங்கிரசுக் குழு ஆறு பேரின் பெயரை, அகில இந்தியத் தலைவர் சஞ்சீவிக்கு அனுப்பியிருக்கிறது பிரதேசக் காங்கிரசுக்குழு தேர்ந்தனுப்பும் பெயர்களை அப்படியே ஒப்புக்கொள்வது தான் காங்கிரசுத் தலைவருக்குள்ள மரபு. ஆனால் சஞ்சீவியார் ஆந்திரக் காங்கிரசினர் குறித்த ஆறு பேரையும் அப்படியே ஒப்புக்கொள்ளவில்லை. ஒய். மகாநந்தி என்பார் வயதில் முதியவர்; வெள்ளையன் நாட்களில் தியாகம் செய்தவர்; தொல்லைகள் பல பெற்றும் கலங்கா நெஞ்சுடன் காங்கிரசில் இருப்பவர்; மொத்தத்தில் காந்தியின் வழியை உணர்ந்தவர். மன்னிக்கமுடியாத இந்தக் குற்றங்களுக்காக அவரை நீக்கிவிட்டு, சஞ்சீவியார் ஏ. வெங்கல ரெட்டி என்ற தங்கக்கட்டியை நியமித்துக்கொண்டிருக்கிறார். வெங்கல ரெட்டியின் பெருமைகள் பல. வெள்ளையனை விரட்ட முனைந்ததில்லை அவர்; காங்கிரசென்று ஓர் இயக்கம் இருப்பதைக்கூட அறியாதவர்; அதுமட்டுமில்லை; "பதவியைப் பெறுதல் ஒன்றே வாழ்க்கையின் இலட்சியம்!" என்பதை உணர்ந்து அந்த இலட்சிய வெற்றிக்காகத் தேர்தல் நேரங்களில் பொதுவுடைமையரோடும் சேர்ந்து காங்கிரசாரை எதிர்த்துப்போராடியவர். பொதுவுடைமையரோடு சேர்ந்து போராடியும் பதவி பெற முடியாத அவர், இப்போது சமய சஞ்சீவியாரால் பெருமைப்படுத்தப்பட்டிருக்கிறாராம். ஆமாம்! இத்தனை பெருமைகளையும் உடைய வெங்கல ரெட்டி காங்கிரசில் இருந்தால்தானே, அவரால் கட்சிக்குக் கிடைக்கும் பயன்கள் கிடைக்கக் கூடும்! அதனால்தான் சஞ்சீவியார் ஆந்திரக் காங்கிரசார் குறித்தனுப்பிய மகா நந்தியாரின் பெயரை நீக்கி விட்டு, வெங்கல ரெட்டியாரின் பெயரைச் சேர்த்துக்கொண்டாராம்!

இந்த அரிய செயலை செய்துவிட்டுக் கர்நூலுக்கும் வந்திருக்கிறார் சஞ்சீவியார். 'வருக! வருக! அரும்பெருந் தலைவரே! வருக! அரியாசனத்திருக்கும் ஏந்தலே வருக! மண்ணுயிரைத் தன்னுயிராய்க் கருதும் மன்னவரே வருக! நீதி தவறா நெடுஞ்செழியரே வருக! தியாகப் பரம்பரையின் திலகமே வருக! கட்சிக்கு இலட்சிய வாதிகளைச் சேர்த்தவரே! 'பதவி ஒன்றே பிறவிப்பயன்!' என்ற பொன்னான தத்துவத்தைக் காத்தவரே! வருக! வருக! இன்னும் பல பயன்களைத் தருக! தருக!" என்றல்லவோ வரவேற்றிருக்க வேண்டும். மாறாகக் கர்நூல் காங்கிரசார் அவரிடம் கேள்வியொன்றை விடுத்திருக்கின்றனர்.

"ஓய், சஞ்சீவியாரே! ஒத்துழையாமைக் காலத்தில் கடுஞ் சிறைவாசம் கண்ட ஒய். மகாநந்திக்கு பதவி மறுத்திருக்கிறீர். மாறாக நம்மைவிட்டு வெகு தொலைவில் இருந்த வெங்கல ரெட்டிக்குச் சிங்காதனம் தந்ததேன்? காப்பு உள்ளத்தவர்க்கு வெள்ளைத் தொப்பி மாட்டலாமா? காங்கிரசில் துரோகிகளுக்கு இடம் தரலாமா?' எனக் கடிந்து கேட்டிருக்கின்றனர். பரிதாபம்! நாட்டு நடப்புத் தெரியாதவர்கள்! நேரு, டி. டி. கே. அவர்களையும் காமராசர் முத்தையாவையும் அணைத்துக் கொண்டபோது, தோழர் சஞ்சீவி வெங்கல ரெட்டிக்கு இடம் தந்ததில் என்ன தப்பு? இன்றையக் காங்கிரசின் இலட்சணமும் அக்கட்சி இலக்கணமும் இது தான் என்று இவர்களுக்குத் தெரியவில்லையே! ஐயோ! ஆந்திரமே! உனக்கேன் இந்த ஆத்திரமே?

x x x

சீக்கியரின் தியாகச் சுவடியைக் கிழித்தெறியத் துடிக்கின்றனர் தில்லியார். அவர்களது உரிமைப் போராட்டத்தை அந்நிய நாட்டுத் தூண்டுதல் என்று கற்பிக்க நினைக்கின்றனர்; தூற்ற முயல்கின்றனர். அதே நேரத்தில் சஞ்சீவியார் தன் கட்சியைச் சேர்ந்த தூய உழைப்பாளிக்குப் படுகுழியைக் காட்டுகிறார். எங்கோ இருந்த வெங்கல ரெட்டிக்குத் தன் அரியாசனத்தோடு சரியாசனம் தருகிறார்.

x x x

இந்தக் கொடுமைகளை எல்லாம் இந்தத் தடவை உலாப் போனபோது கண்டேன். நம்மைத் தூற்றுகிற மாற்றார் எக்கேடு கெட்டாலும் நமக்குக் கவலையில்லை. ஆனால் ஆளும் கட்சியாயிருக்கிற அவர்கள் கட்சி, ஆயிரந் தவறுகளைச் செய்கிறது. பின்னும் சீக்கியரின் உரிமைப் போராட்டத்தை எள்ளி நகையாடுகிறது. அதே முறையில் நமது போராட்டங்களையும் தாழ்த்தக்கூலிப் படைகளை அனுப்புகிறது, அத்தனை தொல்லைகளையும் பார்த்த நான் சித்தார்த்தனாகிவிட விழையவில்லை. முதலில் சொன்னதுபோல் இருக்கவே இருக்கிறது' 62. அக்காலம் வரும்போது கணக்கிட்டு முடிப்போம். காங்கிரசின் வாழ்வை!

—மா. முத்துராமலிங்கம்.

நாடக விமர்சனம்

நினைத்தது ஒன்று! நடந்தது ஒன்று!

சூலை அழகிரி நாடக மன்றத்தினர் கடந்த 16-7-60 அன்று மாலை சென்னை மியூசியம் தியேட்டரில் இந்த நாடகத்தை நடத்தினர். நாடகக் கதையை தோழர் சீனிவாசன் எழுத, தோழர் கதிர் டி சுப்பிரமணியம் பயிற்சியளித்து அரங்கேற்றினர்.

வஞ்சிக்கப் பட்டாள் வள்ளி; எரிமலையானுன் அண்ணன்; கொத்திக் கிழித்திடத் துடித்தான், கொடுமைக்காரனை; கொடுமைக்காரன் பணக்காரன் ஆனதால் தப்பிக்கிறன்; இறுதியில் திருந்துகிறன்; பிரிந்தவர்கள் கூடுகின்றனர்; கதை முடிகிறது.

நாடகத்தின் தலைப்பு நாட்டு மக்களுக்கு அறிமுகமான தொடர். கதை நிகழ்ச்சிகளும் அப்படியே! அதனால்தான் ஒலிபெருக்கி ஒத்துழைக்காதிருந்தும், மக்கள் நாடகத்தைத் தொடர்ந்து சுவைத்தார்கள்.

நாடகத்தின் உரையாடல்கள் எளிய நடையிலும் துரித கதியிலும் சென்றன. குறிப்பாக நகைச்சுவைப் பகுதிகள் சிறப்புடன் தீட்டப்பட்டிருந்தன. நடிகர் சிலர் மனப்பாடக் குறைவினால் இடையில் தடங்கல்கள் ஏற்பட்டாலும், நகைச்சுவைக் காட்சிகள் அவற்றை மறக்கச் செய்தன. நகைச்சுவை நடிகர் தோழர் பரமானந்தம் மக்கள் மனதில் இடம் பிடித்துக் கொண்டார்.

கதாநாயகி தர்மாவும், அவர் அண்ணனாக நடித்த கதிர் டி.சுப்பிரமணியமும் சிறப்பாக நடித்தனர்.

பாடல்கள் பலவும் இனிக்கும் பல பண்களில் அமைந்திருந்தன. "ஆசைகொண்டவரை இதயம் தேடுதே!" என்ற பாடலும், பூங்காவில் பாடப்பட்ட கதம்பக்காதல் பாடலும் சுவை மிகுந்தவையாக இருந்தன. பாடல்களின் சிறப்புக்குப் பின்னணிக் குழுவினர் ஒத்துழைத்தது குறிப்பிடத்தக்கது.

தலைமை வகித்துப் பேசினர் பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள். அவர் குறிப்பிட்டதையே நாமும் குறிக்க விரும்புகிறோம்: இன்னும் பல இடங்களில் நடக்க நடக்க நாடகத்தில் புதுப்புதுச்சுவைகளும் அமைப்புகளும் பெருகி, மெருகேறும்; மேலும் வெற்றி வரும்.

நாடகத்துக்கு முன்னிலையாளராயிருந்த தோழர் பாலன் எம். சி. அவர்கள். வாழ்த்தியதுபோல் நாமும் அழகிரி மன்றத்தாரை வாழ்த்துகிறோம்! அன்னார் ஆர்வம் வெல்க! ஆற்றல் வாழ்க!

—கண்டு வந்தோன்.

கெமிலி

மொழி பெயர்த்தவர் :
ப. சி. அ ணெங்காமுடி

அலெக்சாந்தர் டூமாசு அவர்களால் எழுதப் பட்ட சுவைமிக்க கடைசி நாவல் இது.

பெரும்பாலும் மொழி பெயர்ப்பு நாவல்கள் தமிழகத்தைப் பொறுத்த வரை கிராக்கியுடன் விலே போவதில்லை. விரல் விட்டு எண்ணக்கூடிய சில குறிப்பிடத் தகுந்த மொழி பெயர்ப்புகளே நிலையான இடம் பெற்றுள்ளன

நாவலேயோ, சிறு கதைகளையோ, கட்டுரைகளையோ வேறு மொழிகளிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தெழுதும் பொழுது, சிலர் தாய்மொழிக்குத் தரவேண்டிய சிறப்பையே மறந்து விடுகிருர்கள். இந்தச் செயலில் மகுடபதிகளாக விளங்குபவர்கள், தங்களுச்கு மட்டுமே எழுத வரும் என்ற குருவிக்கூடு எண்ணம் படைத்த க. நா. சுப்பிரமணியம், இரா. தேசிகன் போன்றவர்களாவார்கள். சிறப்படைந்திருக்கும் சொந்த நாட்டு மொழியை, மேலும் சிறப்படையச் செய்பவர்கள், வளப்பவர்கள், தொண்டு செய்பவர்கள் என்ற பெருமை எல்லா நாடுகளிலேயும் வலுவுற்ற எழுத்தாளர்களையே சாரும். அவர்கள் தான் நாட்டு வரலாற்றிலும். இலக்கியச் சரித்திரத்திலும் தனி இடத்தைப் பெறுவார்கள் இலக்கியச் சந்ததிகளின் வணக்கத்திற்குரியவர்களாவும் ஆவார்கள். ஆனல் தமிழகத்தில் வாழும் எழுந்தாளர்களில் சிலர் இதற்கு வீதி விலக்கு, க. நா. சுப்பிரமணியம், தேசிகன் போன்றவர்கள் தமிழ்த் தாய்க்கு அணி பூட்டி அழகு செய்து பெருமைப் பட்டிடவில்லை; அடிமைத் தனத்தில் ஊறிப்போன அவர்கள் மனம் அதற்கு விருப்பா விட்டாலும், தமிழுக்குத் துரோகம் செய்யாமலாவது இருந்திருக்கலாம் இவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட சில நாவல்களைப் படிக்கும் பொழுது குமட்டல் எடுக்கிறது. வரிக்கு வரி வடமொழி வார்த்தைகளை வம்புக்கிழுத்துத் திணித்து வைத்திருக்கிருர்கள். 'தமிழ்ச் சொற்கள் எங்கே?'' என்று நுண் கண்ணுடி வைத்துத் தேட வேண்டிய நிலை! எதிர் காலத்தில் இவர்கள் எழுத்துக்களின் மீது (அப்படி ஒன்று இருந்தால்) வெற்றிலைக் காவி படிகின்ற வெற்றிகரமான நிகழ்ச்சி நடந்து தீரும் என்பதில் ஐயமில்லை.

கெமிலி மொழி பெயர்ப்பு மேற் குறிப்பிட்டவர்களுக்கொரு முன் மாதிரி; வழிகாட்டி. நூற்றித்தொன்னூற்றி இரண்டு பக்கங்களை அடக்கியுள்ள இந்நாவலில், க. நா. சு. போன்றவர்கள் செய்த தமிழ்க் கொலைவஞ்சகமில்லாமல் தவிர்க்கப் பட்டிருக்கிறது. அத்தனையும் தூய எளிமையான தமிழ் சொற்கள். இதனுல்கதையின் விறுவிறுப்போ நடை அழகின் மிடுக்கோ குறையா வண்ணம், மெருகு கொடுத்து இழையவிட்டிருக்கிருர் மொழி பெயர்த்த ஆசிரியர் ப.சி. அ. வணங்காமுடி.

வாழ்க்கைக்குத் தேவையான பல தத்துவங்கள் நாவல் முழுதும் சிதறிக் கிடக்கின்றன.

இந்நூலின் முன்னுரையில் கூறியுள்ளபடி ''கண்ணீர் விட முடிந்தவர்கள் மட்டுமே இந்தநூலின் ஏடுகளைப் புரட்டலாம்!''

எழில்மிக்க பாரிசு நகரத்தில் வாழ்ந்த மார்கரட் என்ற விலை மகளின் வாழ்க்கையை மையமாக வைத்து, கதை சுழலுகிறது. ஒரு விலேமாதின் மீது நமக்கு வெறுப்பு ஏற்படுவதற்குப் பதிலாக, அவள்மீது நமக்கு அனுதாபம் ஏற்படும் வகையில் பாத்திரத்தின் தன்மையை உருவாக்கிக் காட்டியிருப்பது, 'அலெக்சாந்தர் டூமாசால்தான் அது முடியுமோ?'' என்ற ஐயத்தை நமக்கு ஏற்படுத்துகிறது.

தன் ஆசைக்காதலன் ஆர்மாண்டுக்கு மார்கரட் கடிதம் எழுதும் பொழுது அன்புள்ள குழந்தைக்கு என்று தொடங்கும் வரிகள் நெஞ்சில் நிற்பவை!

மார்கரட் இறந்த பிறகு, அவளுடைய கல்லறை ஐந்து வருடங்களுக்கு மட்டும் குத்தகை எடுக்கப் பட்ட இடத்தில் கட்டப்பட்டிருந்தது. அதை நிரந்தரமான ஓர் இடத்திற்கு மாற்ற, சொந்தமாக ஒரு நிலத்தை வாங்கி மார்கரட்டின் எலும்புக்கூட்டைத் தோண்டி எடுத்து அதற்கு முத்தம் கொடுத்துப் புதிய இடத்தில் அதற்குக் கல்லறை எழுப்பி அதன் மீது கெமிலியாமலர்களைத் தூவி ஆர்மாண்ட் கண்ணீர் உகுக்கும் காட்சி—தன் மனைவி மும்தாசுக்காக தாசுமகாலை எழுப்பிய சாசகானைக் காட்டிலும் மனதில் நிலைத்து நிற்கக் கூடிய உயர்ந்த படைப்பு.

இது போன்ற பல சுவையான சம்பவங்கள்பின்னிப் பிணைந்துள்ள நல்ல மொழி பெயர்ப்பு நாவல் கெமிலி.

விலை ரூ 2-0 0

கிடைக்கும் இடம்:
''வளையாபதி பதிப்பகம்''
33 இராம நாயக்கன் தெரு,
நுங்கம்பாக்கம்,
சென்னை-6.

—தினகரன்.

சூதகரோக நிவாரணி

பெண்களுக்கு ஏற்படும் சூதகக் கட்டு, சூதகச்சிக்கல், வயிற்றுவலி, மற்றும் இதனுல் ஏற்படும் நோய்களை பூர்ண குணம் செய்யக் கூடியது.

3 நாள் 6 வேளை மாத்திரை
புட்டி ரூ. 6-00

தேவைக்கு எழுதவும் :—
சம்பு இண்டஸ்ட்ரீஸ், சேலம்-2.

6-8-60-ம் நாள்
''தென்றல்''
கண்ணதாசன்
பிறந்த நாள் வாழ்த்து
மலராக
வெளி வருகிறது.

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, **சென்னை-1.**



விவேகத்தின் அத்தாட்சியாக விளங்குவது எழுத்தாளனின் பேனு முனை.
வீரத்தின் சின்னமாகத் திகழ்வது போர் வீரனின் வாள் முனை.
நாட்டின் பாதுகாப்பிற்கு வாளேந்தும் வீரர்கள் தேவைதான், ஆனல், வாளை நம்பிமட்டும் வளமாக வாழ்ந்துவிட முடியாது.
விவேகமற்ற வீரம் ஜீவனற்ற நதியென வரண்டு காணப்படும்.
கத்தி முனை சாதிக்காத காரியங்களைப் பேனு முனை சாதித்துக் காட்டிய வரலாறுகள் பலவுண்டு.
வாள் முனை பிறர் மருட்சியில் மகிழ்வது,
பேனு முனை அனைவர் உள்ளங்களிலும் உவகைக் கிளர்ச்சியை உண்டு பண்ணிப் பூரிப்படைவது.
ஆகவே, விவேகமே வீரத்தைக் காட்டிலும் அதிக பலம் வாய்ந்தது என அறிகிறேம்.
இத்தகைய விவேக பலத்தைக் கொண்டுதான் மனிதன் வாழ்க்கையின் தரத்தில் உயர்ந்தான் என்று சொல்லலா மல்லவா ?

தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் தபால் மூலம் **கற்கலாம்**

சேர கடைசி தேதி : 9-8-60 } பயிற்சிகள் ஆரம்பம்: 11-8-60

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்கு வரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும். சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு :— (1) சேர விருப்பமுடையவர் கல்வி நிலையத்திலிருந்து அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். (2) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (3) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால், ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (4) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பயிற்சி யளிக்கப்படும். (5) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விளக்கங்களையும் நயா 8 பைசா தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

ஒருத்தி இல்லை!

— வல்லம் வேங்கடபதி, பி. ஏ. (ஆனர்சு;.) —

உண்கின்றேன் உடுக்கின்றேன் உறங்கு கின்றேன்
உண்டென்ன ? உடுத்தென்ன ? உறங்கி யென்ன ?
எண்ணென்றும் எழுத்தென்றும் சொல்லும் கல்வி
ஏடனைத்தும் படிக்கின்றேன் ! படித்து மென்ன ?
பண்ணெழுகும் பாட்டெழுதிப் பார்க்கின் றேன்யான்
பாட்டெழுதிப் பார்த்தென்ன ? சுவைத்து மென்ன ?
'கண்'ணென்றும் 'பொன்'னென்றும் 'கரும்பே' யென்றும்
காதலிக்க, உறவாட ஒருத்தி இல்லை !

நெடுவானில் வெண்ணிலவு தோன்றி, மெல்ல
நீந்துவதைக் காண்கின்றேன் ! கண்டு மென்ன ?
தொடுவானின் விளிம்புக்குள் மின்னல் ஒன்று
துள்ளுவதை வியக்கின்றேன் ! வியந்து மென்ன ?
பொடிமீன்கள் புதைந்தெழுந்து தோன்றும் காட்சி
பொற்காட்சி தான் !இருந்தும் பயன்தா னென்ன ?
'பிடி'யென்றும் 'கொடி'யென்றும் 'பிறையே' யென்றும்
பேசுதற்கும் கொஞ்சுதற்கும் ஒருத்தி இல்லை !

கொல்லையெலாம் முல்லைமலர்க் காடு பூத்துக்
கொல்லென்று சிரித்திருக்கும் ! சிரித்து மென்ன ?
புல்வெளியில் வெண்முத்துக் கூட்ட மெல்லாம்
புத்தழகை விரித்துவைக்கும் ! வைத்து மென்ன ?
சொல்லின்றிப் பொருளின்றிச் சோலைக் குள்ளே
செந்தேனுய்க் குயிலிசைக்கும் ! இசைத்து மென்ன ?
'நில்'லென்றும் 'வா'வென்றும் நீண்ட கண்ணால்
கொல்'லென்றும் சொல்வதற்கோ ஒருத்தி இல்லை!

வெயிலுக்கோ இளைப்பாற ஒதுங்கி நிற்க
வெண்ணிலவுக் குளிர்தோப்பு, தழையின் காடு
கயல்துள்ளும் நீரோடை; பூவின் சேக்கை,
கருவண்டுக் கூட்டங்கள் எல்லாம் பெற்றேன் !
இபலிசைக்கூத் தனைத்துமென்றன் பக்கம் பெற்றேன்
இவையனைத்தும் பெற்றென்ன ? இழந்து மென்ன ?
'மயிலெ'ன்றும் 'குயிலெ'ன்றும் 'மானே' யென்றும்
மனமுருகி அழைப்பதற்கோ ஒருத்தி இல்லை !

உயிர்வளர்க்கும் நல்லுறவை உளத்தில் வைத்தே
உறவாடும் என்நண்பர்க் கூட்ட மெல்லாம்
உயிர்வாங்கும் கொடுங்கூற்ற மாக இந்நாள்
உருவெடுத்து விட்டனவோ ? இல்லை, நான்தான்
உயிர்ப்படங்கி விட்டேனோ ? ஒன்று மேயென்
உள்ளத்துக் கெட்டவில்லை ! எட்டி யென்ன ?
'உயிரெ'ன்றும் 'உளமெ'ன்றும் உணர்வே யென்றும்
உறவாடிக் களிப்பதற்கோ ஒருத்தி இல்லை !

தலைமைக்கழக அறிக்கை: 10/60

தி. மு. கழகச் சட்டதிட்டம்-
விதிமுறைகளில்
திருத்தங்கள்

1960-ம் ஆண்டு சூன் திங்கள் 18, 19-ம் நாட்களில் குமார பாளையத்தில் நடைபெற்ற தி. மு கழகப் பொதுக் குழுவில் திருத்தப் பட்ட சட்டதிட்டத் தேர்தல் விதிமுறைகளுக்கேற்ப நகரக் கிளை கள், பெருநகரக் கிளைகள், வட்டக்கழகங்கள், மாவட்டக் கழகங்கள், தலைமைக் கழகம் ஆகிய அமைப்புகளின் தேர்தல் களில், கீழ்க்கண்டுள்ள திருத்தங்களைத் தேர்தல் ஆணையாளர்களும், கழக உறுப்பினர்களும் மேற்கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம்:—

திருத்தம் 1:

சட்டதிட்டம்—விதி 29: பிரிவு 5

சிற்றூர்க் கிளைகள், பேரூர்க் கிளைகள், பெருநகர உட்கிளைகள் அலுவலாளர்கள் தவிர்த்து கழகத்தின் மற்ற எல்லா அமைப்புகளின் அலுவலாளர் பதவிகளுக்கும், பொதுக்குழு உறுப்பினர் பதவிக்கும் தேர் தலில் நிற்க விரும்புபவர்கள் குறைந்தது மூன்று ஆண்டுகளா வது தொடர்ந்து உறுப்பினராயிருந்திருக்க வேண்டும்......

திருத்தம் 2:

தேர்தல் விதிமுறையில் மாற்றம்

பாராளுமன்றம். சட்டமன்றம், ஊராட்சி மன்றம் ஆகியவைகளில் உறுப்பினராயிருப்பவர்கள் பொதுச்செயலாளர் பதவிக்குத் தேர்ந்தெடுக் கப்பட்டால், இரண்டில் ஒன்றிலிருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட பதி னைந்து நாட்களுக்குள்ளாக விலகிவிட வேண்டும்.

குறிப்பு : இத்திருத்தம் நடைமுறைப் பழக்கம் (Convention) என் பதற்குப் பதிலாக சட்டதிட்டம்—விதி 29 பிரிவு 14ஆக இடம் பெறுகிறது.

அறிவகம், சென்னை-13,
9-7-1960.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. க.

கடுகி விரைந்து செயலாற்று !

— அருப்புக்கோட்டை இராமசாமி —

வென்றால் திராவிட நாடடா—நாம்
வீழ்ந்தால் அது சுடுகாடடா
இன்று துணிந்துதோள் தட்டடா-வட
இந்திக் கொருகுழி வெட்டடா...(வென்)
என்றும் வடவர்கள் ஆள்வதா-நம்
இன்பத் திராவிடம் தாழ்வதா...(வென்)
இந்தி மொழியர சாள்வதா-நாம்
என்றும் அடிமையாய் மாள்வதா...(வென்)
வீரத்-தமிழ்க்குலம் நாமடா-போர்
வென்று பகைமுடிப் போமடா...(வென்)
செந்நாய்க் குலம் முடிசூடவோ-வீர
சிங்கக் குலம் துதிபாடவோ...(வென்)
சொந்தச் சுதந்திரப் போரடா-கண்
தூக்கம் ஒழித்துடன் சேரடா...(வென்)

கடமையறிந்து பணியாற்று!

— புதுவைச் சிவம் —

ஓரினத்தை மீளாத அடிமை யாக்க
உலகத்தில் கையாளும் முறைக ளெல்லாம்,
சீருடைய அவ்வினத்து மொழியை மெள்ளச்
சித்ரவதை செய்தழித்துத் தகுதி யற்ற
நேரியதல் லாதமொழி தமதென் றாலும்
நிலைபெற்ற ஆட்சிமொழி என்றே ஆக்கி,
வேரழிப்பர் இனஉணர்வைப் பண்பை எல்லாம்!
விழிமூடி அவ்வினமும் உறக்கங் கொள்ளும்!

அந்தமுறை இனிதறிந்த- சூழ்ச்சி மிக்க
ஆரியராம் வடநாட்டார் இந்தி யாவை
எந்தவித மோஆளும் வாய்ப்புப் பெற்ற
எக்களிப்பால், தென்னாட்டை உறிஞ்சி வாழச்
சிந்தையினில் திடங்கொண்டே, உணர்வை மாய்த்துத்
தீராத அடிமைதனில் நம்மை வீழ்த்த,
இந்தியினை ஆட்சிமொழி ஆக்க லானார்!
இதையறிந்த தமிழா,உன் கடமை என்ன ?

பல்வளமும் சிறந்தொளிரும் இனிமை வாய்ந்த
பாராண்ட தமிழ்மொழியை இழப்பா யோநீ ?
மல்கிருளில் பிறநாட்டார் உழன்ற காலை
மாண்புற்று விளங்கியஉன் சீர்ப்பண் பாட்டைச்,
சொல்லரிய நற்கலையை, ஒழுக்கந் தன்னைத்
தொலைத்தினத்தின் உணர்வழிக்க முயல் வோருக்கு
நல்வரவு நீகூறி வரவேற் பாயோ ?
நாயினுங்கீழ் நிலையடைய விரும்புவாயோ ?

உயிரைவிடச் சிறந்ததுவாம் மான வாழ்வென்
றுரைத்தினிய வாழ்வுதந்த தமிழ்ச்செல் வத்தைக்
கயமையுறு பகையழிக்க முனையும் போதுன்
கடன்மறந்தே துரோகியென மாறு வாயோ ?
சுயநலத்தைப் பெரிதென்றே எண்ணி விட்டால்,
தொல்புவியில் உனைமதிப்பார் யாரே சொல்வாய் !
பயிரழிக்கும் களையாக இருக்க லாமோ ?
'பழிசுமக்கும் பொதிக்கழுதை' யாக லாமோ ?

சீர்த்தியுடன் இந்நாட்டை ஆண்டு வந்த
செந்தமிழ மறவர்களின் வழியில் வந்த
போர்க் குணத்துத் தமிழா,நீ சிந்தித்துப் பார்!
புலனற்ற பதுமையென விளங்க வேண்டாம்!
ஆர்த்தெழுவாய் ! உன்அழியாத் தமிழைக் காக்க
அணிவகுப்பில் சேர்ந்திடுவாய் ! தாய கத்தின்
நேர்த்தியுறு விடுதலைக்கே உயிர்தந் தேனும்
நிறுத்திடுவாய் உன்புகழை ! வெற்றி ! வெற்றி !

வெண்பாப் போட்டி

1. எச்சரிக்கை காணீர் இது!

"வாழும் தமிழை வளரா தொழித்துவிட்டால்
நாளும் வடவருக்கு நாமடிமை-ஆளுதற்கு
நச்சரவ இந்தியினை நத்திப் புகுத்துமுன்
எச்சரிக்கை காணீர் இது!"
—அரிமழர், கரு. செல்லமுத்து, புதுக்கோட்டை.

வேங்கைப் புலியுன்னை வீழ்த்த நினைக்கையிலே
பாங்காய்ப் புதருள் பதுங்கிடுமே-ஈங்கதுபோல்
பச்சைத் தமிழர் பதுங்கிட்டார்! நீ யொழிவாய்!
எச்சரிக்கை காணீர் இது!
—நித்திலன், திருமங்கலம்.

படிக்கின்ற போதினிலே பாழிந்தி வந்தால்
வெடிக்கின்ற வேட்டுக்கும் அஞ்சோம்,-கடிக்கின்ற
நச்சரவம் உட்புகுந்தால் 'நாசம்' உறுதியென்ற
எச்சரிக்கை காணீர் இது.
—வெ. திர்வேந்தல், சுந்தராபுரம்.

வேங்கைக் குகையில் வெள்ளாடு புகுந்தாற்போல்
ஈங்கு வடநாட்டின் இந்திமொழி-ஓங்குங்கால்
கச்சைகட்டிப் போர்தொடுப்போம் கண் டதுண்டம் ஆக்கிடுவோம்
எச்சரிக்கை காணீர் இது!
—முத்துச்சோழன், கோவை.

நம்பத் தகுதியிலா நச்சுமொழி இந்தியினைச்
சம்பத் துடன்சென்று சாய்த்திடுவோம்!-தெம்பின்றிப்
பிச்சைபெற் றேவாழ்ந்த பேடிகளே! உங்களுக்கோர்
எச்சரிக்கை காணீர் இது.
— இரா. பன்னீர்ச்செல்வன், குடந்தை.

கண்டுவா வென்றிடின் கொண்டே வருகின்ற
ண்ணாவின் தம்பிகள் ஆர்த்தெழுந்தால்-மாண்புடனே
இச்சகத்தில் தோன்றிடும் "இன்பத் திராவிடம்"
எச்சரிக்கை காணீர் இது!
— த. இர. வெ. இரத்தினம், சென்னை-2.

நச்சரவ மாம்இந்தி நாடாள வேண்டுமென
அச்சுறுத்திப் பார்க்கின்றார் ஆளவந்தார்;-அச்சமுறோம்!
கச்சைகட்டி நாங்கள் களம்நோக்கி வந்திடுவோம்
எச்சரிக்கை காணீர் இது!
— முசுமீன், கோவை.

எத்திக்கும் தித்தித்(து) எழில்மணக்கும் செந்தமிழ்நம்
சொத்தாகும் பாரறியச் சொல்லிடுவீர்-பித்தர்கள்
நச்சரவாம் இந்தியினைக் கொண்டுவரின் நாமெதிர்ப்போம்
எச்சரிக்கை காணீர் இது!
— இரா. செ. இராமன், பெங்களூர்-4.

முல்லைச் சிரிப்பீந்து முக்கோடி தந்தாலும்
கொல்லவரும் நச்சிந்திகொள்வோமோ-இல்லையில்லை
எச்சில் இலையதுவே எட்டாத தொலைபறக்கும்
எச்சரிக்கை காணீர் இது!
— வி. பாலசண்முகம், சென்னை-7.

முச்சங்கம் வைத்தாண்ட முத்தமிழாம் தேனிருக்க
நச்சரவாம் இந்தியிங்கே வந்திட்டால்- அச்சரக்கைத்
துச்சமென் றெண்ணியே தூளாக்கிப் போட்டிடுவோம்
எச்சரிக்கை காணீர் இது!
— சு. மா. இராமலிங்கன், புதுவை.

தங்கத் தமிழர் தரங்கெட்ட இந்திதனை
இங்கே வரவிட் டிருப்பாரோ? அங்கமுயிர்
பச்சைத் தமிழர்க்குப் பாகல்ல தேனல்ல
எச்சரிக்கை காணீர் இது!
— பொ. முத்துசாமி, மம்சாபுரம்.

அச்சமில்லை! ஆண்மையுண்டு! ஆற்றல் மிகவுமுண்டு!
துச்சமென எண்ணித் துணிந்துவிட்டோம்!- நிச்சயமே
கச்சித் தலைவரது கட்டளையும் பெற்றுவிட்டோம்
எச்சரிக்கை காணீர் இது!
சச்சி - கட்சி அல்லது காஞ்சீபுரம்
— லெ. பழநியப்பன், சென்னை-1.

பல்கலையில், தொல்சிறப்பில், பார்வியக்கும் சொல்வளத்தில்
வல்லதமிழ் 'வாழ்தற்கே' வாழ்ந்துவிடு- நல்தமிழா!
நச்சரவம் இந்தியின்கீழ் நந்தாயோ? ஆர்த்தெழவே
எச்சரிக்கை காணீர் இது!
— ம நீலமுகில், உடுமலை.

தென்னாட்டின் சீர்சிறப்புஞ் செந்தமிழுங் கண்டேங்கிப்
பொன்னாட்டைக் கொள்ளைகொள்ளப் போராடும் அன்னியர்சொல்
நச்சனைய இந்தி நமக்காமோ? நாமெதிர்ப்போம்
எச்சரிக்கை காணீர் இது!
— கு. சக்கரைவேலு, பழனி.

கண்ணான தென்னகத்தைக் காத்திடவே போருக்கிங்
கண்ணா அழைத்தால் அணிவகுக்க- மண்ணுலகில்
கச்சணிந்த பெண்ணும் களம்நோக்கி வந்திடுவாள்.
எச்சரிக்கை காணீர் இது!
— தி. இர. வெங்கடேசன், சென்னை-31.

துள்ளி வரட்டுமே தோட்டாக்கள், அடக்குமுறை
அள்ளி வரட்டுமே நாம்அஞ்சோம்- இந்தியெனும்
நச்சரவந் தன்னையே நைத்திடுவோம் வடவரே!
எச்சரிக்கை காணீர் இது.
— ஆர். எஸ். பிரகாசம், பரமக்குடி.

நச்சரவாம் இந்தியதை நந்தவனத் தில்விட்டே
சச்சரவு செய்கின்ற சண்டாளர்- நிச்சயமாய்
அச்சமுறப் போர்க்கொடிஎன் ஆரணங்கும் ஏந்திடுவாள்
எச்சரிக்கை காணீர் இது!
— பூவை அமுதன், சென்னை-6.

கங்குலில் வந்தென்றன் கன்னத்தில் முத்தமிட்(டு)
எங்குசென்றீர் அத்தான்! இனியும்நீர்- இங்குவந்தே
நச்சரிக்கா தீர்!என்றென் நல்வயிற்றுச் சேய்செப்பும்
எச்சரிக்கை காணீர் இது
—மல்லிகா, கருப்பட்டிபாளையம்.

சுண்டுமொழி நந்தமிழும் கன்னடமும் நற்றெலுங்கும்
பண்பார் மலையாளம் பாங்குடனே- கொண்டநாம்
நச்சுமொழி இந்தியினை நாட்பொழுதில் வீழ்த்திடுவோம்
எச்சரிக்கை காணீர் இது.
— மதிவளவன், கரந்தை.

தாயைத் தமிழ்த்திருவைத் தன்னெஞ்சில் செம்பொருளை
மாய விடுவமோ மாநிலத்தில்?- பேயர்காள்
அச்சம் அகத்தில்லை ஆண்மை அரிநாங்கள்
எச்சரிக்கை காணீர் இது.
— காரைச்செல்வி, காரைக்கால்.

ஆண்ட இனத்தை அடித்தொழிக்க இந்திவரின்
பூண்டோடும் எந்தமிழர் போர்புரிவர்- ஈண்டெது
'பச்சைத் தமிழர்' பதவி கவிழும்முன்
எச்சரிக்கை காணீர் இது;
— செல்வி, சுந்தராபுரம்.

நச்சரவு இந்திதென் னாட்டினிலே வந்துவிட்டால்
மிச்சமின்றி நாமதியோம்; மீட்சியில்லை- நிச்சயமாய்;
'பச்சைத்' தமிழ்மக்கள் பாமுறக்கங் கொள்ளாதீர்
எச்சரிக்கை காணீர் இது,
— ஆ. வி. நாதன், சென்னை-24

வெந்தோம்; வெகுண்டெழுந்தோம்; வீணர் செயல்முடிக்க
வந்தோம்; வழிதடுப்போர் வாழ்விழப்பர்;- இந்திபெனும்
எச்சி மொழியின் இறுமாப்பைத் தூளிடுவோம்;
எச்சரிக்கை காணீர் இது.
— கோ. பாரதி, காரை.

வெண்பாப் போட்டி 2.

ஈற்றடி : தேனே கதவைத் திற.

இறுதி நாள் 4-8-'60

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு